விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 05 செவ்வாய்க்கிழமை (22.10.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 307

## கோண்டாவிலில் வயோதிபப் பெண் சித்திரவதையின் பின் படுகொலை

### நீதி விசாரணையில் தெரியவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் தனிமையில் வசித்த வயோதிபப் பெண், சித்திர வதையின் பின் கொடூரமாக கழுத் தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட் டுள்ளார் என்று நீதி விசார ணை யின்போது, தெரியவந்துள்ளது.

கொடூர குணமுடைய ஒருவனே பெண்ணை 23

## ஜனாதிபதித் தேர்தலை இந்தியா உன்னிப்பாக அவதானிக்கின்றது

### எகொனமிக் ரைம்ஸ் செய்தி வெளியீடு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இந்தியா தொடர்ந்தும் அவ தானித்து வருவதாக எகொனமிக் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசியல் வரலாற் றில் முதன் முறையாக பிரதமர் அல்லது எதிர்க் 23

# தமிழ்த் தரப்பு முன்வைத்துள்ள கோரிக்கைகளில் நியாயம் உள்ளது

### ஜே.வி.பியின் ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவிப்பு

*(கொழும்பு)* ஜனாதிபதித் தேர்தலை அடிப்படையாக வைத்து தமிழ்க் கட்சிகள் முன்வைத்த 13 அம்சக் கோரிக் கைகளில் பலவற்றை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணி, வடக்கு கிழக்கு இணைப்பு என்ற கோரிக்கையை மாத்திரம் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஜே.வி.பியின் ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

வைத்தியசாலையில்

## இளைஞன் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பொது வைத்தியசாலையில் இளைஞர் ஒரு வர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றுமுன் தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் முல்லைத்தீவு முள ளியவளையைச் சேர்ந்த சி.நிரோ ஜன் என்ற 33 வயது இளைஞரே மரண 23

## நீதிமன்றில் ஆஜராக ஞானசார தேரருக்கு

### உத்தரவு பிறப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

ஞானசார தேரர் உள்ளிட்ட 4 பேரை நவம்பர் மாதம் 8ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

முல்லைத்தீவு நாயாறு குரு கந்த ரஜமஹா விஹாராதிபதியின் இறுதிக்கிரியை தொடர்பான நீதி மன்றின் உத்தரவை மீறிய வழக்கில் இந்த 23

பதவிக்காலம் நிறைவடைய முன்

## மரண தண்டனையை நிறைவேற்றுவேன் – ஜனாதிபதி

(கொழும்பு)

போதைப்பொருள் குற்றங் களுடன் தொடர்புடையவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற றப்பட வேண்டும் என்ற தீர்மானத் திற்கு சாதகமாக நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கப் பெற்றால் பதவிக் காலம்நிறைவடை 23

## அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலததை முன்னிட்டு அத்தியாவசிய உணவு பொருட்கள் சிலவற்றின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பீ.ஹெரிசன் 23

ஜனாதிபதியாகிய பின்னர்

## எந்த வரப்பிரசாதத்தையும் பெற மாட்டேன் – சஜித்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கான எந்த ஒரு வரப்பிரசாதங் களையும் பெற்றுக் கொள்ளப் போவதில்லை என புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.



23

## பிரபாகரனைவிட பாரதூரமான கோரிக்கையை தமிழ்க் கட்சிகள் முன்வைத்துள்ளன – ரோஹித்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப் பின் தலைவர் பிரபாகரனின் கோரிக்கைகளை காட்டிலும் பார தூரமான கோரிக்கைகளையே தமிழ்த் தேசியக் கட்சிகள் முன் வைத்துள்ளன. நாட்டை பிளவு படுத்தும் விடயங்களுக்கு மாற்றுக் கருத்துக்கள் ஏதும் இன்றி மறுப்பு தெரிவித்துள்ளோம்.

தமிழ்க் கட்சிகளின் கோரிக்கை தொடர்பில் ஆளும் தரப்பின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேம தாஸவின் நிலைப்பாடு என்ன? நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வும் என பாராளுமன்ற உறுப் பினர் ரோஹித் அபேகுணவர்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக் கையில அவர் மேற் 23

தேர்தல் வன்முறை

## 140 முறைப்பாடு பதிவு – பப்ரல்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைச் சம்பவங் கள் தொடர்பில் இதுவரையில் 140 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று ள்ளதாக சுதந்திரமான தும் நியாயமானதுமான 23

## ஐ.தே.க பொய் பிரசாரம்

### மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக் ஷவை தோற்கடிக்க 23

அரசியல் பழிவாங்கலுக்குள்ளான

## இராணுவத்தினருக்கு நியாயம் வழங்கப்படும் – கோத்தா

(கொழும்பு)

ஆட்சிக்கு வந்தவுடன் அரசியல் பழிவாங்கலுக்குட்படுத்தப்பட்டுள்ள இராணுவத்தினர், புலனாய்வுப் பிரிவினருக்கு நியாயம் வழங்கப் பட்டு அவர்கள் கௌரவிக்கப்படு வார்கள் என பொதுஜன பெரமுனவின் ஜனாதி 23

## வெற்றிக்கு கொண்டு செல்லும் தலைவரே நாட்டுக்குத் தேவை

### ஜே.வி.பி தெரிவிப்பு

(கொழும்பு)

நியூசிலாந்து கிறைஸ்ட்சேர்ச் தாக்குதலை அடுத்து அந்நாட்டை வெற்றியை நோக்கி கொண்டு சென்ற பிரதமர் ஜசிந்தா ஆர்டெர்ன் போன்ற ஒரு தலைவரே எமக்கு தேவை என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத் நாயக்க தெரிவித்துள் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நான்காண்டு நிறைவில் உங்கள் நினைவுகள் சுமந்து...



17 • 04 • 1971

05 • 11 • 2015

திருமதி

## நிகிலா சுதர்சன்

திதி: அபரபக்க நவமி 22.10.2019

நானிலத்தில் எமை நல்நிலைக்கு ஆளாக்கி
நாம் கொண்ட இலக்குகள்
நெருங்கி வரும் நேரமிதில்
நமைப் பிரிந்து நீங்கள்
நாதன் தாழ் பணிந்து நான்காண்டுகள்
நகர்ந்தோடி விட்டனவே

அன்பின் உறைவிடமே அம்மா
அகத்தினுள் உமைவைத்து
அஞ்சலிப்போம் உங்கள்
அன்பினுள் திளைத்திருப்போம்
என்றென்றும் நாம்..

302, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

கணவர், கண்மணிகள்.

(729)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு. தம்பிஜயா வாமதேவன்

(அதிபர் – யா/ தந்தைசெல்வா தொடக்க நிலைப் பள்ளி, தெல்லிப்பளை)

எமது பாடசாலையின் அதிபர் **தம்பிஜயா வாமதேவன்** (அகில இலங்கை சமாதானநீதிவான் J.P (W.I)), **கௌரவ. அ.பிரேமசங்கர்** (மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி - யாழ்ப்பாணம்) முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்தமையையிட்டு பெருமகிழ்வடைவதுடன், அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம் (ஆசிரியர்கள்)

(730)

கிளிநொச்சியில்

## மணல் கடத்தல் 7 பேர் கைது

(தர்மபுரம்)

கிளிநொச்சிமாவட்ட குற்றத் தடுப்பு பிரிவிற்கு கிடைக்கப்பெற்றதகவலின் அடிப்படையில் கடந்த சனிக்கிழமை மேற்கொண்டசுற்றிவளைப்பின் போது பூநகரி பிரதேசத்தில் அனுமதிப்பத்திரத் திற்கு முரணான முறையில் மணல் ஏற்றிய 2 டிப்பர் வாகனங்களும், அக்கராயன் பகுதியில் கிரவல் அகழ்வில் ஈடுபட்ட 4 டிப்பர் வாகனமும் மணல் ஏற்றிய ரக்ரர் ஒன்றும் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இச் செயற்பாட்டில் ஈடுபட்டதன் பேரில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 7 பேரும் அந்தந்த பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-316)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்

## பிறேம்குமார் கைலாஷ்

(யா/உயரப்புலம் மெதடிஸ் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை)

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 165 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த பி.கைலாஷ் அவர்களை வாழ்த்துகின்றோம்.


வாழ்த்துவோர் : அப்பா பிறேம்குமார், அம்மா தயா, அண்ணா ஜீவிதன் மற்றும் அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, மாமா, அத்தைமார், பெரியம்மா, பெரியப்பா, அக்காமார்.

பொன்னையா லேன், ஆனைக்கோட்டை.

(732)

# மரண அறிவித்தல்

## பாலர் செல்லையா



தோற்றம் 26 • 08 • 1936

மறைவு 21 • 10 • 2019

அந்தணத்திடல் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் குஞ்சர் கடை, கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட பாலர் செல்லையா அவர்கள் 21.10.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலர் தம்பதியினரின் அன்பு மகனும் இராசம்மாவின் பாசமிகு கணவரும் குணம், ரத்தி, நாகராசா, நாதன், மூர்த்தி, பத்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வநாயகம், பிறே, பவானி, வாணி, மலர், சேந்தன் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.10.2019) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவரந்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குஞ்சர் கடை,
கரணவாய். (C-7988)

தகவல் : S.நாகராசா (மகன்)
துஷானி கிளாஸ் கவுஸ், நெல்லியடி - 077 828 6695

# மரண அறிவித்தல்

## திருமதி ஆறுமுகம் முத்துப்பிள்ளை

(வேலணை – 06)

காரைநகரை பிறப்பிடமாகவும் வேலணை 6ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது உயரப்புலம் லேன் ஆனைக்கோட்டையில் வசித்து வந்தவருமான திருமதி ஆறுமுகம் முத்துப்பிள்ளை நேற்று (21.10.2019) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - லட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், கோபாலகிருஸ்ணன் (பிரதேச சபை உறுப்பினர் - வேலணை) அவர்களின் அன்புத் தாயாரும், பிரியதர்ஷினி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - வேலணை), அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பொன்னன் மற்றும் தம்பையா, விஸ்வலிங்கம், காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகம்மா, ஈஸ்வரி, இராணி ஆகியோரின் மைத்துனியும், டினோசன் (சுவிஸ்), யதுர்ஷா (மாணவி - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பிர்த்திகா (மாணவி - கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2019) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (இ)

தகவல் : ஆ.கோபாலகிருஷ்ணன் (மகன்)
பிரதேச சபை உறுப்பினர் - வேலணை
077 967 2902


உயரப்புலம் லேன், ஆனைக்கோட்டை.

# தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகளை கோத்தா நிராகரித்தமை சாதாரண விடயம்

## மகிந்த அணி அலட்சியம்; மக்களை ஏமாற்றமாட்டார்களாம்

(கொழும்பு)

**தேர்தல் வெற்றிக்காக தமிழ் மக்களிடம் போலியான வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றமாட்டோம். வடக்கு மற்றும் கிழக்கில் தீர்க்கப்பட வேண்டிய அடிப்படைப் பிரச்சினைகள் பல காணப்படுகின்றன. அவற்றிற்கு முழுமையான தீர்வு குறுகிய காலத்திற்குள் வழங்கப்படும் என பொதுஜன பெரமுனவின் (மகிந்த அணி) பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். இதேவேளை வடக்கில் 5 தமிழ்க் கட்சிகள் இணைந்து தயாரித்த 13 அம்சக் கோரிக்கைகளை உள்ளடக்கிய திட்டத்தை பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ நிராகரித்துள்ளமை சாதாரண விடயமேயாகும். இந்த நிராகரிப்பினைக் கொண்டு அவர் தமிழ் மக்களுக்கு எதிரானவர் என்று கருதுவது முற்றிலும் தவறானதாகும் எனவும் அவர் விளக்கினார்.**





13 அம்சத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படும் என்று போலியான வாக்குறுதிகளை வழங்கி தமிழ் மக்களை ஏமாற்ற வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. தேர்தல் வெற்றியைக் கருத்திற் கொண்டு செயற்படுவதாக இருந்தால் நல்லாட்சி அரசாங்கம் போல் பல வாக்குறுதிகளை வழங்கலாம். நிறைவேற்ற முடிந்த விடயங்களை மாத்திரமே தேர்தல் வாக்குறுதிகளாக வழங்குவோம். இதில் தமிழ்-சிங்கள மக்கள் என்ற வேறுபாடு கிடையாது.

அரசியல் தீர்வு என்ற விடயத்தை குறிப்பிட்டே ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களின் ஆதரவுடன் அதிகாரத்தைக் கைப்பற்றியது. கடந்த நான்கரை வருட காலமாக அரசியல் தீர்வு குறித்து முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் அனைத்தும் பயனற்றதானது. ஒரு தரப்பினருக்குச் சாதகமாக செயற்படும் போது அதன் எதிர்விள்ளவு பிறிதொரு தரப்பினருக்கு தாக்கம் செலுத்துவதாகக் காணப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கம் அரசியல் தீர்வு என்ற விடயத்தை குறிப்பிட்டே கடந்த நான்கரை வருட காலமாக தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளது.

அரசாங்கத்தில் முக்கிய பொறுப்பிலும் அந்தஸ்த்திலும் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவில்லை. மாறாக தேவையற்ற விடயங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்தது. இறுதியில் அரசியல் தீர்வும் கிடைக்கப் பெறவில்லை. வடக்கு, கிழக்கிற்கு அபிவிருத்தியும் ஏற்படுத்தப்படவில்லை. இதில் ஏமாற்றமடைந்தது தமிழ் மக்கள் மாத்திரமேயாகும்.

தமிழ் அரசியல் தலைமைகள் சுயநலப் போக்குடனே செயற்படுகின்றார்கள். அதன் காரணமாகவே தமிழ் மக்களின் ஆதரவைக் கோருகின்றோம். எத்தரப்பினரும் முரண்படாத வகையில் வடக்கு மற்றும் கிழக்கில் அபிவிருத்திகளை முன்னெடுப்போம் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்களும் கிடையாது.

தமிழ் மக்கள் பொது யதார்த்த நிலைமையையும் நல்லாட்சி அரசாங்கத்தில் ஏமாற்றப்பட்டதையும் புரிந்து கொண்டு அரசியல் ரீதியில் தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# விடுதலைப் புலிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்ததா?

## கேள்விகளை அடுக்கினார் மகேஷ்

- இரு அரசுகள் மீதும் குற்றச்சாட்டு
- புலிகள் மீண்டும் வர வாய்ப்பு
- கோத்தா மீதும் மறைமுகமாக சாடல்



(கொழும்பு)

தேர்தல் நெருங்கும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்றம் பெறுகிறார்கள் என்று அண்மைய சம்பவங்களை வைத்து வதந்திகள் பரப்பப்படலாம் என ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார். கொழும்பு பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் கிளிநொச்சியில் ஆயுதங்கள் மீட்கப்பட்டமை, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையோர் என்ற குற்றச்சாட்டில் மலேசியாவில் ஏழு பேர் கைது செய்யப்பட்டமை போன்ற சம்பவங்கள், சிங்கள மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் மீண்டும் தலையெடுக்கின்றனர் என்ற அச்சத்தை ஏற்படுத்தி அதன் மூலம் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியா? என மகேஷ் சேனநாயக்கவிடம் கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், "எந்தவொரு பயங்கரவாத அமைப்பையும் ஒரே தடவையில் தடுத்து விட முடியாது. இலங்கையில் மாத்திரமல்லாது உலகின் பல நாடுகளிலும் இவ்வாறான அமைப்புக்கள் இருக்கின்றன.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்ததா? என்று சிந்திக்க வேண்டும். யுத்தத்தின் பின்னர் இரு அரசாங்கங்கள் இருந்தன. அவற்றால் இவர்களுக்குத் தீர்வு வழங்கப்பட்டதா? புலிகள் இயக்கத்தில் செயற்பட்ட இளைஞர், யுவதிகளுக்குத் தீர்வு வழங்கப்பட்டதா? அவர்களின் வாழ்வாதாரம் சீர்படுத்தப்பட்டுள்ளதா? என்ற கேள்விகளுக்குப் பதில் இல்லை.

நான் இராணுவத்தில் இருந்ததால் அவர்களுடன் பணிபுரிந்திருக்கின்றோன். ஆனால் அரசாங்கம் அவ்வாறு செயற்படவில்லை. புலிகள் மீண்டும் தலையெடுத்து விட்டார்கள் என்று கூற முடியாது. ஆனால் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வரக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

சில சந்தர்ப்பங்களில் இவ்வாறான பிரச்சினைகள் ஏன் ஏற்படுகின்றன என்று சிந்திக்க வேண்டும். வெளிநாடுகளில் இருக்கின்ற புலம் பெயர் தமிழர்கள் இவ்வாறு பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். அவ்வாறில்லை என்றால் அவர்களால் அங்கு வாழ முடியாது. இவ்வாறான அமைப்புக்களும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே யார் இதனைச் செய்கிறார்கள் என்று நாம் தான் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

தேர்தல் நெருங்கும் போது இவ்வாறான பிரச்சினைகள் அதிகமாகத் தோற்றுவிக்கப்படலாம். இவ்வாறான பிரச்சினைகளைத் தோற்றுவித்து தேசிய பாதுகாப்பு பற்றிப் பேசுவார்கள்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழர்களின் வாக்குகளைப் பெற்ற சிலர் சரணாகதி அரசியலில் இறங்கியுள்ளனர்

## சிறிநேசன் விமர்சனம்



(கோவில்குளம்)

**தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் சிலர் சரணாகதி** அரசியலில் இறங்கியுள்ளனர் எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோவில்குளம் ஸ்ரீசித்தி நாதர் நாகம்பாள் அறநெறிப் பாடசாலையின் ஆண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அன்று யுத்தத்தைப் பற்றியும் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் பற்றியும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றியும் கடும் தொனியில் பேசி கடந்தகால ஆட்சியாளர்களைப் படுமோசமாக விமர்சித்த தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டவர்கள் இன்று அவர்களின் கால்களில் சரணாகதியடைந்துள்ளனர். அவர்கள் கொள்கையற்ற அரசியலை நடத்திக் கொண்டிருக்கின்ற போக்கினை நாங்கள் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் மறதியுள்ளவர்களும் அல்லர். நன்றி கெட்டவர்களும் அல்லர். ஏமாற்றப்படக் கூடியவர்களும் அல்லர்.

கடந்த காலத்தில் பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள் கொல்லப்பட்டனர். இது எந்தக்காலத்தில் நடந்தது என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும். மீண்டுமொரு மோசமான யுகத்திற்கு நாம் செல்லப்போகின்றோமா? இருக்கின்ற சுதந்திரமான சூழலில் தொடர்ந்தும் செயற்படப் போகின்றோமா? என்பதைக் கருத்திற்கொண்டு முடிவுகளை எடுக்க வேண்டும்.

கூலிக்கு மாரடிப்பவர்களாகவோ மதுபோத்தல்களுக்கு ஏமாறுபவர்களாகவோ அல்லது பணத்திற்கு விலைபோகின்ற சந்தைப் பொருட்களாகவோ இருக்காமல் நாங்கள் செயற்பட வேண்டும்.

எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொழும்பில் கூடவுள்ளது. இதன்போது ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்துத் தெளிவான முடிவுகள் எடுக்கப்பட்டு இந்த மாதத்திற்குள் அறிவிக்கப்படும். அதன் பின்னர் நாங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக மக்களுக்கு விளக்கப்படுத்தப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் கந்தசாமி நாகேஸ்வரி

(கந்தசாமி ரீச்சர்)



(c-7989)

21 / 10 / 2019 அன்று இறைபதம் அடைந்த எமது ஆசிரியரும் ஏழாலை மகா வித்தியாலய உப அதிபராக கடமை ஆற்றி ஓய்வு பெற்றவருமாகிய அமரர் கந்தசாமி நாகேஸ்வரி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யோ. கோணேசலிங்கம்
(பழைய மாணவன்,
ஏழாலை மகா வித்தியாலயம்)


தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3 வது டெஸ்ட்

# இன்னிங்ஸ் வெற்றியை நோக்கி இந்தியா ஜோராக முன்னேற்றம்


## தென்னாபிரிக்க வீரர்கள் பொறுப்பற்ற ஆட்டம்

இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இப்போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், போலோ ஒன் முறையில் துடுப் பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்கா அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 132 ஓட்டங்களை பெற்றுள்ளது.

ஆட்ட நேர முடிவில், டின் எல் கருக்கு பதில் வீரராக களமிறங்கியுள்ள தெனி யூஸ் டி பிரையன் 30 ஓட்டங்களுடனும், என்ரிச் நோர்ட்ஜே 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

போலோ ஒன் முறையில் துடுப்பெடுத் தாடிவரும் தென்னாபிரிக்கா அணி, இந்தியா அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட் டங்களுடன் ஒப்பிடுகையில் 203 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது. பெரும் பாலும் இந்தப் போட்டியில், இந்தியா அணி, இன்னிங்ஸ் வெற்றியை பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



# அமெரிக்காவின் தமிழ் விஞ்ஞானி யாழ்.இந்துக்கல்லூரிக்கு வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் விஞ்ஞானி பேராசிரியர் சிவா சிவானந்தன் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு வருகை தந்தார்.

கல்லூரி அதிபர் ரட்ணம் செந்தில்மாறன் அவரை வரவேற்பளித்தார்.விஞ்ஞானி சிவானந்தன் பாடசாலை மாணவர்களையும் சந்தித்து தனது அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்தார்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவனும் தற்போது அமெரிக்காவின் விஞ்ஞானியுமான சிவானந்தனுக்கு பாடசாலை மாணவர்களினால் நினைவுப்பரிசில் வழுங்கப்பட்டது.

(ம-3)



# இலங்கைக் கிரிக்கெட் வீரர்களின் புதிய ஊதிய ஒப்பந்தம் வெளியீடு

## –அதிக ஊதியத்தில் மத்தியுஸ்

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களின் புதிய ஊதிய ஒப்பந்தம் தொடர்பான விபரங்களை, இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

34 வீரர்களின் ஒப்பந்தத்திற்காக கிட்டத்தட்ட 1.7 மில்லியன் அமெரிக்க டொலர் கள் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, புதிய வீரர்களின் ஒப்பந்தக்காலமாக 14 மாதங்கள் நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது.

ஏ.பி.சி.டி என நான்கு தரங்களாக பிரிக்கப்பட்டுள்ள இந்த புதிய ஒப்பந்தத்தில் ஆச்சரியப்படும் வகையில், சில வீரர்கள் அதிக தொகைக்கு ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளனர்.

ஏ பிரிவில், சகலதுறை வீரர் அஞ்சலோ மத்தியூஸ் 130,000 அமெரிக்க டொலர் களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஒப்பந்த பட்டியலில் அதிக தொகைக்கு விலைபோன வீரராக அஞ்சலோ மத்தியூஸ் இடம்பெற்றுள்ளார்.

மேலும், ஏ பிரிவில் திமுத் கருணாரத்ன மற்றும் வேகப் பந்துவீச்சாளர் சுரங்க லக்மால் ஆகியோர் 100,000 டொலர் களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

பி பிரிவில், தினேஷ் சந்திமால் 80,000 அமெரிக்க டொலர் களுக்கும், லசித் மலிங்க 70,000 அமெரிக்க டொலர்களுக்கும், குசல் ஜனித் பெரேரா மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் 70,000 அமெரிக்க டொலர்களுக்கும், தில்ருவான்


பெரேரா, நிரோஷன் டிக்வெல்ல ஆகியோர் 50,000 அமெரிக்க டொலர்களுக்கும், தனஞ்சய டி சில்வா 52,500 அமெரிக்க டொலர்களுக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.சி பிரிவில், திசர பெரேரா,நுவன் பிரதீப் ஆகியோர் 50,000அமெரிக்க டொலர் களுக்கும், லஹிரு திரிமான்ன 35,000 அமெரிக்க டொலர்களுக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

டி பிரிவில் அகில தனன்ஞய 50,000 டொலர்களுக்கும், துஷ்மந்த சமீர 30,000 டொலர்களுக்கும், தனுஷ்க குணதிலக 35,000 டொலர்களுக்கும், ரொஷேன் சில்வா மற்றும் விஷ்வ பெர்னாந்து 25,000 டொலர்களுக்கும், லக்ஷன் சந்தகன் மற்றும் இசுரு உதான ஆகியோர் 40,000 டொலர் களுக்கும், அவிஷ்க பெர்னாந்து மற்றும் தசுன் ஷானக்க ஆகியோர் 30,000 டொலர்களுக்கும், லஹிரு குமார 35,000 டொலர் களுக்கும், ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுதவிர, சதீர சமரவிக்ரம, அமில அபொன்சோ, ஒசத பெர்ணாந்து, செஹான் ஜய்சூரிய, அஞ்சலோ பெரேரா, கசுன் ராஜித மற்றும் லசித் எம்புல்தெனிய ஆகியோர், புதிய ஒப்பந்தத்தில் 20,000 அமெரிக்க டொலர்களுக்கு இணைந் துள்ளனர்.

இவர்கள் தவிர ஜெப்ரி வன்டர்சே, அசித்த பெர்னாந்து மற்றும் சமிக்க கருணா ரத்ன ஆகியோர் 15,000 அமெ ரிக்க டொலர்களுக்கும், வனிந்து ஹஸ ரங்க 25,000 அமெரிக்க டொலர்களுக் கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை உபுல் தரங்க, அசேல குணரத்ன, லஹிரு கமகே, கௌசால் சில்வா, செஹான் மதுசங்க, மலிந்த புஷ்ப குமார மற்றும் டில்சான் முனவீர போன்ற வீரர்களும் புதிய ஒப்பந்தத்தில் நீக்கப் பட்டுள்ளனர்.



# சீரற்ற காலநிலையால் இதுவரை ஐவர் பலி!

## பத்துப்பேர் படுகாயம்

(கொழும்பு)

**சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை ஐவர் உயிரிழந்ததுடன் பத்துப் பேர் படுகாயமடைந்ததாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.**

பதுளை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்தனர். இதேவேளை 5,660 குடும்பங்கள் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளதோடு சுமார் 700 வீடுகள் சேதமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

அத்துடன் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும். மேல், மற்றும் தென் மாகாணங்களிலும் மன்னார் மாவட்டத்திலும் கரையோரப் பகுதிகளில் காலை வேளையிலும் மழை பெய்யக் கூடும். மேல், மத்திய, சப்ரகமுவ, வடமேல், தென் மற்றும் ஊவா மாகாணங்களில் 75 தொடக்கம் 100 மில்லி மீற்றர் அளவான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

நாட்டைச் சூழவுள்ள கடற் பரப்புக்களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும். மன்னாரிலிருந்து புத்தளம், கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புக்களில் பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை, இம்புல்பே மற்றும் ஒப்பநாயக்க பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கும், பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கும் கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட மற்றும் யட்டியாந்தோட்டை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்குமென தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்தது.

மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் மேலும் சுட்டிக்காட்டியது. (இ-7)



சாவகச்சேரி தேவாலய வீதியில் அமைந்துள்ள ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக் கூடத்தின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி ஓவியர் எம்.எஸ்.சிவதாஸனின் தாயன்பு ஓவியக் கண்காட்சி நேற்று முன்தினம் சாவகச்சேரி ஹன்ற் ஓவியக்கூட மண்டபத்தில் இடம்பெற்றது. ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக் கூட இயக்குநர் திருமதி யோகமணி அழகரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், சிறப்பு விருந்தினர்களாக அமெரிக்க சிக்காகோ பல்கலைக்கழக பேராசிரியர் விஞ்ஞானி சி.சிவானந்தன், வட்டக்கச்சி மத்திய கல்லூரி அதிபர் எஸ்.பூலோகராஜா, உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் பி.அனிற்றா, சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் ல.முகுந்தன் மற்றும் ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-சுபேசன்)

# மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடில்லை

## சுகாதார அமைச்சின் பணிப்பாளர் விளக்கம்

(கொழும்பு)

நாட்டில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடில்லை என்று சுகாதார அமைச்சின் விநியோகப் பிரிவின் பணிப்பாளர் ஏ.ரி.சுதர்ஷன் தெரிவித்தார்.

இதுவரை நாட்டிற்குள் தேசிய ரீதியில் 145 மருந்து வகைகள் தயாரிக்கப்படுகின்றன. கடந்த 4 வருட காலப்பகுதியில், மருந்துக்கான செலவீனம் 45 பில்லியன் ரூபாவிலிருந்து 53 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.

இலவசமாக இவற்றை வழங்குவதற்காக 8 பில்லியன் ரூபாய் மருந்து வகைகள் இறக்குமதி செய்யப்பட்டன.

சேனக பிபில மருந்துக் கொள்கை மிகவும் வெற்றிகரமாக கடந்த 4 வருட காலப் பகுதியில் நடைமுறைப்படுத்தப் பட்டது.

இதில் உள்ளூரில் மருந்து வகைகள் தயாரிப்பதை ஊக்குவித்தல், விலைக்கட்டுப்பாடு தொடர்பான விடயங்கள் தொடர்பிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதாகவும் விநியோகப் பிரிவின் பணிப்பாளர் சுதர்ஷன மேலும் தெரிவித்தார். (இ-7)


"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோவான்.11:25)

**விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு நாள்**



**அமரர். சிறில் சுகந்தரன்**

(சமாதான நீதவானும், ஓய்வு பெற்ற அதிபரும்)

ஆண்டவன் படைப்பு 09.09.1948 ஆண்டவன் அழைப்பு 22.10.2018

கருணைக் கடலான இறைவா! உம்முடைய வான் வீட்டில் ஓய்விற்காக அழைக்கப்பட்ட சிறில் சுகந்தரன் அவர்களின் ஆன்மாவை உம்முடைய கருணைக் கரங்களால் காத்தருளும்!

அன்னாரின் இல்லத்தில் 22.10.2019 (செவ்வாய்க்கிழமை) இன்று நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக மாலை 5.00 மணிக்கு சுன்னாகம் தூய அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

(722)

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.**

Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர். 077 978 8727


# தெரிவுக்குழுவின் அறிக்கையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது

## வெளியாகும் முன்பே நிராகரித்தது மகிந்த அணி

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சபாநாயகர் கரு ஜெயசூரியவால் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கை முழுமையாக சுயாதீனமானது என்று ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஆராயும் பாராளுமன்ற தெரிவுக் குழு நாளை பாராளுமன்றில் அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளது.

இந்த அறிக்கை முழுமையாக சுயாதீனமானது என்று ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. பயங்கரவாதி சஹ்ரானுடன் நேரடி மற்றும் மறைமுக தொடர்பு கொண்டவர்கள் என்று ஆளும் தரப்பினராலும், எதிர்த் தரப்பினராலும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் இக்குழுவில் அங்கத்துவம் வகித்தனர்.

குண்டுத்தாக்குதல் தொடர்பில் அரசாங்கத்தின் மீது எழுந்த குற்றச்சாட்டுக்களையும், குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நோக்கிலே பாராளுமன்ற தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது.

இவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு எவ்விதச் சட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது. குண்டுத் தாக்குதல் குறித்த முழுமையான பக்கச் சார்பற்ற விசாரணைகள் எதுவும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை.

எமது அரசாங்கத்தில் சுயாதீன விசாரணை ஆணைக்குழு அமைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு தேசிய பாதுகாப்பு ஒரு இனத்திற்கு மாத்திரம் அல்லாமல் அனைத்து இனங்களுக்காகவும் பலப்படுத்தப்படும்.

போர் வெற்றியை தேர்தல் பிரசாரத்திற்குப் பயன்படுத்தக்கூடாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டமையை ஏற்றுக் கொள்ள முடியாது.

யுத்த வெற்றியை பிரசாரம் செய்வதால் எவ்விதச் சட்ட சிக்கலும் ஏற்படாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இந்திய அமைதிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட வைத்தியசாலை ஊழியர்களின் 32-வது நினைவேந்தல்






யாழ். போதனா வைத்தியசாலையின் 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21, 22 ஆம் திகதிகளில் இந்திய அமைதிப்படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 21 ஊழியர்களின் 32 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுக்காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது. பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் உயிரிழந்த ஊழியர்களின் உருவப்படங்களுக்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தி ஈகச் சுடர் ஏற்றப்பட்டது. (இ-10)

## மாற்றுத்திறனாளிகளின் மாதக் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படல் வேண்டும்

### யாழில் பிரதமரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மாற்றுத்திறனாளிகளான முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டோர், இரண்டு கைகளையும் இழந்தோர், இரண்டு கண்களிலும் பார்வையை முற்றாக இழந்தோருக்கான மாதாந்தக் கொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபாய் அரசு வழங்க வேண்டும் என தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பு கடந்த வாரம் யாழில் வைத்து பிரதமரிடம் கோரிக்கை விடுத்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் பிரதமருடனான மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ் மாற்றுத் திறனாளிகள் அமைப்பினர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்ததோடு சுயமதிப்பீட்டு மாநாட்டின் பிரதியையும் அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த சிறு குறிப்பு அடங்கிய கடிதத்தையும் பிரதமரிடம் கையளித்தனர். (இ-10)

## மத்திய கல்லூரியில் நாளை தமிழ் விழா

யாழ்.மத்திய கல்லூரியின் "தமிழ் விழா" நாளை 23 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.45 மணியளவில் தந்தை செல்வா கலையரங்கில் ஆ.சாயி சங்கர் தலைமையில் அதிபர், கலாநிதி எஸ்.கே. எழில்வேந்தன் முன்னிலையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக தியாகி அறக்கொடை நிறுவன ஸ்தாபகரும் தலைவருமாகிய வா.தியாகேந்திரன் (பழைய மாணவர்).சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## உங்கள் ஜென்ம நட்சத்திரங்களும் துல்லியமான பலன்களும்

## ஆயில்யம் நட்சத்திரக்காரர்களின் பலன்கள்

அதிர்ஷ்ட சோதிடம்

ஆயில்யம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடைய இராசிகடகம் ஆகும். கடகத்தின் அதிபதி சந்திரன் ஆவார். அதன் சின்னம் நண்டு. ஆயில்யம் நட்சத்திரத்தின் அதிபதி புதன் ஆவார். அதன் சின்னம் ஆண் பூனை ஆகும். எனவே ஆயிலியம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களிடம் மேற்கூறிய கிரகம்+சின்னங்களின் குணம்பிரதிபலிக்கும்எனஅறியவும்.

ஆயில்யத்தில் பிறந்தவர்களிடம் அதிக பிடிவாத குணமும் நேர்மையும் நல்ல புத்திசாலித்தனமும் சாந்த குணமும் கொஞ்சம் பயந்த சுபாவமும் உண்டு. கடற்கரையோரம் உள்ள ஊர்களில் வசிக்க வேண்டும் என இவர்கள் நினைக்க நேரலாம். கடற்காற்று, பீச், பார்க் என உல்லாசமாகச் சென்று பொழுது போக்குவது இவர்களுக்கு ரொம்ப பிடித்தமான ஒரு விடயம் ஆகும். வெளிநாடு சென்று வாழ வேண்டும் என்பது சிலருடைய லட்சியமாக இருக்கலாம். தாய்ப்பாசம், தந்தைப் பாசமுடையவர்கள். கல்வியில் இவர்கள் கெட்டிக்காரர்களாகத் திகழ்வார்கள். ஒரு சிலர் துறைமுகத்தில் வேலை செய்ய நேரலாம். பொதுவாக இவர்கள் நெருப்பு, கரன்ட், ஹோட்டல், இயந்திரம் சம்பந்தமான தொழில் செய்து ஜீவனம் நடத்த நேரலாம். இவர்களது இல் வாழ்க்கை ஓரளவு சந்தோஷமாக இருக்கும். இருப்பினும் இடையிடையே சிறு சிறு மனஸ்தாபங்கள் வந்து விலகக் கூடும். புத்திர பாசமுடையவர்கள். ஒரு சிலர் உயர் பட்டம் பெற்று நல்ல வேலையில் அமர இடமுண்டு.

பெரும்பாலும் இவர்கள் அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் இருப்பார்கள். பெண் வசீகரமுடையவர்கள். மிகவும் சுவையான உணவை ரசித்து உண்ணும் பழக்கமுடையவர்கள். சகோதர பாசமுடையவர்கள். பெண் களை உயர்வாக மதிக்கக்கூடிய சுபாவமும் இவர்களிடம் உண்டு. வீடு, வாகன வசதிகளுடன் இவர்கள் சிறப்பாக வாழ்வார்கள் எனலாம். நல்ல ஸ்திரமான மனவுறுதியும் நினைத்ததைச் சாதிக்கக் கூடிய மன வல்லமையும் இவர்களிடம் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

## இராசி பலன்

**மீனம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மேடம்:** மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், பெற்றோர்கள் ஆதரவால் பெருமைகள் காண்பீர்கள்.

**இடபம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், போசன நன்மையுண்டு.

**மிதுனம்:** உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்:** உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | இராசி பலன் | | சந் |
| | | | |
| சனி, கேது | குரு | சூரி, புத, சுக் | செவ் |

கிரகநிலை
சந்திராஷ்டமம்
உத்தராடம்
திருவோணம்

22.10.2019

ஐப்பசி 05, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

நவமி முன்னிரவு 11.38 மணிவரை

பூசம் பிற்பகல் 1.37 மணிவரை

சுபநேரம் 10.32-12.02 மணிவரை

இராகுகாலம் 0302-4.32 மணிவரை

வளவன்

**கடகம்:** தொழில் நலன் கருதி அனுபவமிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**மகரம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், பேச்சில் தெளிவு பிறக்கும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், செய் தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

**தனுசு:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு.

**துலாம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மெலோங்கும் நாள், திடீர் பண வரவு மனதிற்கு சந்தோஷம் தரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

## 6 மாதம் கடந்தும் நீதி கிடைக்கவில்லை

# பாதிக்கப்பட்ட மக்கள் நவம்பர் 16 ஆம் திகதி எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் - லான்சா



(கொழும்பு)

தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தத் தவறிய அரசாங்கத்தின் பொறுப்பற்ற நிர்வாகத்தாலேயே ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதல் நடத்தப்பட்டு 6 மாதம் நிறைவடைந்தும் நீதி கிடைக்கவில்லை.

எனவே பாதிக்கப்பட்ட மக்கள் நவம்பர் 16ஆம் திகதி எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் என்று மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

சுயாதீன விசாரணைகள் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கியுள்ளது. இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைத்த அநீதியாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

நீர்கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் அரசாங்கத்தின் பொறுப்பற்ற நிர்வாகத்தின் வெளிப்பாடாகும்.

கத்தோலிக்க மக்களுக்கு ஐ.தே.க. அரசாங்கம் எதனையும் செய்யவில்லை. குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பாராளுமன்றில் குரல்கொடுத்துள்ளமையால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

ஆனால் அந்தத் தெரிவுக் குழுவில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலோடு தொடர்புடைய பலர் உள்ளார்கள். இதனாலேயே தான் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான தெரிவுக்குழுவில் நாம் பங்குபற்றவில்லை எனவும் பயங்கரவாதிகளோடு தொடர்புடைய பலருக்கு நிரபராதிகளென நற்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் பயங்கரவாதிகளைக் காப்பாற்றிய மேல்மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் சாலி, சஹ்ரானுடன் கலந்துரையாடிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோரே ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் அமைச்சர் சஜித் பிரேமதாஸவுடன் இருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலத்திரனியல் ஊடகங்களின் பக்கச்சார்பு குறித்து முறைப்பாடு



(கொழும்பு)

இலத்திரனியல் ஊடகங்கள் பக்கச்சார்பான முறையில் முன்னெடுக்கும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணி தேர்தல்கள் ஆணைக்குழுவில் பல அறிக்கைகளை கையளித்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

இந்தச் சட்டவிரோத நடவடிக்கை குறித்து தலையிடுவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வைத்தியருக்கு சேவைநலன் பாராட்டு



(கரணவாய்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரியாகவும் கரவெட்டி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரியாகவும் கடமையாற்றிய வைத்தியர் சுதோக்குமாருக்கு சேவைநலன் பாராட்டு விழா நேற்று கரவை அபிவிருத்தி ஒன்றியத்தால் நடத்தப்பட்டது. (இ-5-60)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-9 மலர்மகள் வீதியில் 30/10.30/11 என்ற வரி மதிப்பீட்டு இலக்கத்தைக்கொண்ட ஆதனங்கள் ஆறுமுகம் லோகராசாவும் பெண் மங்கையற்கரசியும் என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் அரியாலை மலர்மகள் வீதி நாகமணி நடராசாவும் சிவகாமி சிவலோகநாதனும் பெண் பரமேஸ்வரியும் பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் மகாதேவா முகதாவில் 6566 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் அதே ஊரைச் சேர்ந்த ஆறுமுகம் லோகராசாவும் பெண் மங்கையற்கரசிக்கும் சொரியலாக நில.பர.1 விஸ்தீரணமான ஆதனத்தினை விற்பனை செய்ததாக 1981 ஆவணி 01ஆம் திகதி அறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்னர் இல 9/8, மலர்மகள் வீதி, அரியாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் ஆறுமுகம் லோகராசா பெண் மங்கையற்கரசி தங்கள் அற்றோனித்தத்துவக்காரன் செல்லையா யோகேஸ்வரன் **N.I.C 56171926V** என்ற அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்டவர் மூலம் பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 499 ஆம் இலக்கத்தில் 22.02.2018 ஆம் திகதி நிறைவேறிய வெளிப்படுத்தல் மூலம் இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படுகின்ற ஆதனம் பல்வேறு சொரியல் ஆதனப் பங்குகளினை உள்ளடக்கி வெளிப்படுத்தப்பட்டு பல வருடங்களாக தங்களின் கட்டுப்பாட்டில் காணப்படாமையினால் ஆட்சியுரிமைச் சட்டம் பிரிவு 3இன் கீழ் ஆட்சியுரிமையினைப் பெற்றுவிட்டோம் என வெளிப்படுத்தியுள்ளார். பின்னர் இல 9/8 மலர்மகள் வீதி, அரியாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் ஆறுமுகம் லோகராசா பெண் மங்கையற்கரசி தனது தத்துவக்காரன் இல 9/8 மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லையா யோகேஸ்வரன் மூலம் பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 782 ஆம் இலக்க 21.01.2019 ஆம் திகதியிடப்பட்ட அறுதி உறுதி மூலம் பேரம்பலம் இரவிச்சந்திரன் பெண் விஜயரஞ்சினிக்கு அறுதியாக விற்பனை செய்துள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண மாநகர சபை நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவு சுண்டிக்குளி கோவிற்பற்று அரியாலை இறை J/95 கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள மடத்துவளவும் மறுபிரிவுகளும். நில.3 குளி 12 3/4 இது நில அளவையாளர் ஏ.கந்தசாமி 2017.12.27 ஆம் திகதி அளந்து தயாரித்த 5012 இலக்கப்படத்தில் துண்டு 1 எனக்காட்டப்பட்ட நில.பர.3 குளி 15.73 இந்த நிலப்பரப்பு மூன்று குளி பதினைந்து தசம் எழுபத்தி மூன்று எல்லை.

**கிழக்கு:- ஒழுங்கை**

**வடக்கு:- பரமநாதன் பெண் வரதாம்பிகையினதும் சண்முகராஜா பெண் மௌனாம்பிகையினதும் ஆதனங்கள்.**

**மேற்கு:- ஞான வைரவர் கோவில் ஆதனம்.**

**தெற்கு:- மார்க்கண்டு விஜயராஜாவினதும் கலைராஜ் பெண் வசந்தியினதும் ஆதனங்கள்.**

தற்போது இவ்வாதனத்தை பே.இரவிச்சந்திரன் பெண் விஜயரஞ்சினி தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பே.இரவிச்சந்திரன் பெண் விஜயரஞ்சினி என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இம்மானுவல் ஆனல்ட்)
கௌரவ முதல்வர்,
மாநகர சபை.

# காணி கட்டடம், வெற்றுநிலம், குத்தகை வழங்குவதற்கான கேள்வி கோரல்

பூநகரி ப.நோ.கூ.சங்கத்தின் கீழ்வரும் காணிகள், கட்டடங்கள் குத்தகைக்கு விடப்பட உள்ளது. கேள்வியாளர்கள் தமது மாதாந்த குத்தகையினை குறிப்பிட்டு தலைவர் ப.நோ.கூ.சங்கம், பூநகரி என்னும் முகவரிக்கு 15.11.2019 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

01. ஜெயபுரம் அரிசி ஆலை அமைந்துள்ள காணி, கடைக்கட்டடம், இயந்திர உபகரணங்கள் உட்பட.
02. நாச்சிக்குடாச் சந்தி எரிபொருள் நிலைய வளாகத்துடன் இணைந்த வெற்றுநிலம்.
03. ஜெயபுரம் பழைய அலுவலக கட்டடமும் காணியும்.
04. மட்டுவில் நாடு கிளை நிலையத்துடன் இணைந்த வெற்று நிலம்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

தலைவர்,
பூநகரி ப.நோ.கூ.சங்கம்,
பூநகரி.

(C-7984)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் 2019 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மனம்போல வாழ்த்துகின்றோம்.



செல்வி மகிஜா ஜெயக்குமார்
புள்ளி-157



செல்வி ஆய்ஷா ராஜதீபன்
புள்ளி-153

(C-7982)

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/கம்பர்மலை வித்தியாலயம்,
கொம்மந்தறை.

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2019-16.11.2019



விகாரி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். அவரோடு விரயாதிபதி புதனும், லாபாதிபதி சூரியனும் இணைந்திருக்கிறார்கள். எனவே விரயத்திற்கேற்ற இலாபம் வந்து கொண்டேயிருக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

2 ஆம் இடத்தில் குரு சஞ்சரிப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். மாதத் தொடக்கத்தில் தனாதிபதி செவ்வாய் விரய ஸ்தானத்தில் இருந்தாலும் தனஸ்தானத்தில் குரு இருப்பதால் சுப விரயங்களே அதிகரிக்கும். இல்லத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும்.

சூரியன் நீச்சம் பெற்று உங்கள் இராசிநாதன் சுக்கிரனோடு இணைந்து 'நீச்சபங்க இராஜயோகம்' பெறுகிறார். எனவே சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது நடைபெறத் தொடங்கும். உத்தியோகத்தில் பணி நிரந்தரம் பற்றிய நல்ல தகவல் வரலாம். உறவினர் பகை உருவாகும் வாய்ப்பு உண்டு. வீடு, நிலபுலன்கள் மற்றும் வாகனம் சம்பந்தமான பிரச்சினைகள் முளைக்கும். ஆனால் அவற்றை சாமர்த்தியமாக சமாளித்து விடுவீர்கள். குலதெய்வ வழிபாடுகளை நிறைவேற்றுவீர்கள்.

3 இல் இருக்கும் சனியின் பார்வை பஞ்சம ஸ்தானத்தில் பதிவதால், பிள்ளைகளால் பிரச்சினைகள் வரலாம். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். வியாபாரத்தில் கூட்டாளிகளை நம்பி எந்தக் காரியமும் செய்ய இயலாது. தனித்து இயங்க வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் அதற்கும் சந்தர்ப்பங்கள் கைகூடி வரவில்லையே என்று கவலைப்படுவீர்கள். ஆனால் எல்லாவற்றுக்கும் விடை கூறும் விதத்தில் குருப்பெயர்ச்சி நிகழவிருக்கின்றது.

சகாய ஸ்தானத்திற்கு, அதாவது தனது சொந்த வீட்டிற்கு வரும் குரு பகவான், ஒக்டோபர் 28 ஆம் திகதிக்கு மேல் உங்களுடைய இலாப ஸ்தானத்தைப் பார்க்கப் போகிறார். எனவே மாதத்தின் பிற்பகுதியில் உங்கள் மனக் கவலைகள் அகலும். பணப் புழக்கம் சிறப்பாக இருக்கும். இனத்தார்களின் ஒத்துழைப்பு கிட்டும். எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

இம்மாதம் கந்தசஷ்டி விழா நடைபெற உள்ளது. கந்தசஷ்டி அன்று முருகப்பெருமானை வழிபட்டால் நிம்மதி கிடைக்கும். மேலும் தீபாவளித் திருநாளில் உங்களுக்கு அதிர்ஷ்டம் தரும் வண்ணத்தில் ஆடைகளை அணிந்து கொண்டு தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள்.

## உடன் பிறப்புகளின் உதவி கிட்டும்

**தனுசு இராசியில் குருவின் சஞ்சாரம்**

இதுவரை 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் ஒக்டோபர் 28 ஆம் திகதி 3 ஆம் இடமான சகாய ஸ்தானத்திற்கு செல்கிறார். இது அவருக்கு சொந்த வீடாகும். 3 இல் குரு பலம்பெறும்பொழுது முன்னேற்றம் கூடுதலாகக் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும். இழப்புகளை ஈடுசெய்ய ஏதேனும் ஒருவகையில் உங்களுக்கு பண உதவி கிடைக்கும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கடன்சுமை குறையும். காது சம்பந்தப்பட்ட நோய் அகலும். நெருங்கிய உறவினர் மூலம் நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

**விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்**

உங்கள் இராசிநாதனாகவும் அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன், ஒக்டோபர் 29 ஆம் திகதி தன ஸ்தானத்திற்கு வருகிறார். அங்கிருந்து கொண்டு சப்தம பார்வையாக தனது சொந்த வீடான ரிஷப




இராசியைப் பார்க்கிறார். காரகன் தன் பாவத்தைப் பார்த்தால் தோஷங்கள் அகலும் என்பார்கள். எனவே வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றைக் குறிக்கும் இடமான 2 ஆம் இடத்தில் இப்பொழுது சுக்கிரன் சஞ்சரிப்பதால் குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். தனவரவு திருப்தி தரும்.

**செவ்வாய் பெயர்ச்சியும் புதனின் வக்கிர நிவர்த்தியும்**

நவம்பர் 7 ஆம் திகதி துலாம் இராசியில் புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். நவம்பர் 12 இல் துலாம் இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். இக்காலத்தில் உங்களுக்கு இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள் உருவாகலாம். வெளிநாட்டு பயண அனுகூலம் உண்டு. முன்னோர் வழி சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகளை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். புதிய வாகனம் வாங்கலாமா? என்று நினைப்பீர்கள். பணி நிரந்தரம் பற்றிய நல்ல தகவல் வரலாம்.

இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் மேற்குப் பார்த்த துர்க்கையை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். கனிவாகப் பேசிக் காரியத்தை சாதித்துக் கொள்வீர்கள். மாதத் தொடக்கத்தில் குடும்பப் பிரச்சினைகள் கூடுதலாக இருக்கலாம். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு மகிழ்ச்சி அதிகரிக்கும். மனதிற்கு பிடித்த சம்பவங்கள் நிறைய நடைபெறும். சுக்கிர பலம் நன்றாக இருப்பதால் ஆடை, ஆபரணம் வாங்கும் யோகம் உண்டு. தனவரவு திருப்திகரமாகவே இருக்கும். கணவன் - மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். மன அழுத்தங்கள் அகலும். புகுந்த வீட்டிற்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் நடந்துகொள்வீர்கள்.

தாய் மற்றும் உடன்பிறப்புகளின் ஆதரவு எப்பொழுதும் போல திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகளின் எண்ணங்களை நிறைவேற்ற சிறிது விரயம் செய்ய நேரிடும். பக்கத்து வீட்டார் பகை மாறும். பணிபுரியும் பெண்களுக்கு பணி நிரந்தரமும் கூடுதல் சம்பளமும் கிடைக்கும். வடக்கு நோக்கிய அம்மனை வெள்ளிக்கிழமை தோறும் வழிபட்டு வருவதன் மூலம் குடும்ப முன்னேற்றம் கூடும்.

---

## செல்வ நிலை உயரும் நேரமிது

விகாரி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியிலேயே குரு பகவான் வீற்றிருக்கிறார். அவரது பார்வை உச்சம் பெற்று சந்திரன் மீது பதிந்து குரு-சந்திர யோகத்தை உருவாக்குகிறது. 12 ஆம் இடத்தில் சூரியன், புதன், சுக்கிரன் ஆகிய 3 கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. எனவே புத- ஆதித்ய யோகமும் புத- சுக்கிர யோகமும் செயற்படுகிறது. இப்படி மூன்று விதமான யோகங்களுக்கு மத்தியில் ஐப்பசி மாதம் பிறப்பதால், சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பாக அமையப் போகிறது. தனவரவு தாராளமாக வந்து சேரும். பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். தொழில் வளர்ச்சி எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகவே இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

செவ்வாய் பலம் நன்றாக இருப்பதால் இடம், பூமியால் இலாபம் உண்டு. வீடு கட்டும் முயற்சி அல்லது வீடு வாங்கும் முயற்சியில் அனுகூலங்கள் கிடைக் கும். பூர்வீகச் சொத்துக் களை பிரித்துக் கொண்டு புதிதாக வீடு கட்டி கிரகப்பிரவேசம் செய்யும் வாய்ப்பும் வந்து சேரும். செவ்வாய் லாப ஸ்தானத்தில் பலம் பெற்றிருக்கும் நேரம், சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும்.

2 ஆம் இடத்தில் சனி, கேது ஆகிய கிரகங்களின் சஞ்சாரம் இருப்பதால் குடும்ப முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியிலும் ஆதாயம் கிடைக்கும். வியாபாரம் சூடு பிடிக்கும். வெளி வட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். இம்மாதம் நடைபெறவிருக்கும் குருப் பெயர்ச்சி உங்களுக்கு செல்வநிலையை மேலும் ஒருபடி உயர்த்திக் கொடுக்கப் போகிறது. உங்கள் இராசியில் இதுவரை சஞ்சரித்து வந்த குருபகவான் தனஸ்தானம் எனப்படும் 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போவதால் பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். பதவி வாய்ப்புகளும் விருதுகளும் கூடக் கிடைக் கும் யோகம் உண்டு. இம்மாதம் கந்தசஷ்டி விழா நடைபெற விருக்கிறது. உங்கள் இராசிநாதன் செவ் வாய்க்குரிய தெய்வம் முருகப்பெருமான். அவருக்கு எடுக்கும் கந்தசஷ்டி நிகழ்வில் கலந்து கொண்டு முருகப்பெருமானை வழிபட்டு வந்தால் முன்னேற்றத்தின் முதல்படிக்குச் செல்லலாம்.

**தனுசு இராசியில் குருவின் சஞ்சாரம்**

இதுவரை ஜென்ம இராசியில் சஞ்சரித்து வந்த குரு பகவான், ஒக்டோபர் 28 ஆம் திகதி தன ஸ்தானத்திற்கு செல்கிறார். 'இரண்டில் குரு வந்தால் திரண்ட செல்வம் வரும்' என்பார்கள். எனவே தொழில் வளர்ச்சி மிகச் சிறப்பாக இருக்கும். பொரு ளாதார முன்னேற்றம் அதிகரிக்கும். சொல்லும் சொற்கள் எல்லாம் வெல்லும் சொற்களாக மாறும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும். ஏழரைச் சனியின் கடுமை குறையும். உடல்நலம் சீராகும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். உறவினர்கள் பகை மறந்து உதவிக்கரம் நீட்டுவர். ஆபரணங்களும் அசையாச் சொத்துக்களும் வாங்கும் யோகம் உண்டு. தொழில் கூட்டாளிகள் உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர். மொத்தத்தில் இந்த குருப் பெயர்ச்சி, முயற்சிகளால் வெற்றி கிடைக்கும் விதத்தில் அமைந்திருக்கிறது.

**விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 7,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஒக்டோபர் 29 ஆம் திகதி உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். தங்கம், வெள்ளி வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வாகன யோகம் உண்டு. புதிய வாகனங்கள் வாங்க வாய்ப்புகள் உருவாகும். பெண்களால் பெருமை சேரும். பெண்களின் சுபச் சடங்குகளும் திருமண வாய்ப்புகளும் கைகூடும்.

**செவ்வாய் பெயர்ச்சியும் புதனின் வக்கிர நிவர்த்தியும்**

நவம்பர் 7 ஆம் திகதி துலாம் இராசியில் புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். லாபாதிபதி புதன் வக்கிர நிவர்த்தி ஆகும்போது, தொழிலில் எதிர்பார்த்ததை விட கூடுதல் இலாபம் கிடைக்கும். வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம் உண்டு. எதிர்பாராத தன லாபங்களும் வந்து




சேரலாம். கௌரவப் பதவிகள் தானே தேடி வரும். மூத்த சகோதரர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொண்டு, முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக்கொடுப்பர். நவம்பர் 12 ஆம் திகதி துலாம் இராசிக்கு செவ்வாய் வருவதால் இடமாற்றங்களும் வீடு மாற்றங்களும் உத்தியோக மாற்றங்களும் உருவாகலாம். சொத்துக்களின் விற்பனை மூலம் கிடைத்த இலாபத்தைக் கொண்டு புதிய சொத்துக்களை வாங்க முற்படுவீர்கள்.

இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானையும் பிரதோச நாளில் நந்தியையும் வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பணத்தேவைகள் உடனுக்



குடன் பூர்த்தியாகும். பாசம் மிக்க உறவினர்கள் நேசக் கரம் நீட்ட முன்வருவர். இல்லத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் பெருமை சேர்க்கும் விதத்தில் நடந்து கொள்வீர்கள். கனிவும் பாசமும் கூடும். கணவன்-மனைவி உறவில், ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படுவீர்கள். குடும்ப முன்னேற்றம் கூட புதிய வழிபிறக்கும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் பகை மறந்து செயற்படுவர். சோர்ந்து போன நேரத்தில் தொழில் பங்குதாரர்கள் சேர்ந்து ஒத்துழைப்பும் தருவர். பிள்ளைகளால் பெருமை சேரும். குருப் பெயர்ச்சிக்குப் பிறகு தனஸ்தானம் வலுவடைவதால் பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும். பணிபுரியும் பெண்களுக்கு உத்தியோகத்தில் உயர்வும் கிடைக்கும். வாகனம் வாங்கி மகிழும் யோகம் உண்டு. சஷ்டி விரதம் இருந்து சண்முக நாதப் பெருமானை வழிபடுவது நல்லது.

(தொடரும்)

## பரிசில் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த பரிசில் தினம் நாளை 23 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் த.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் மா.நவநீதமணி ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-5)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவன் வடக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் நூதன ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.25 மணி முதல் 10.30 மணி வரையுள்ள சுப வேளையில் இடம்பெறவுள்ளது.(இ-10-217)

# குளறுபடிகள் நடந்தால் வாக்களிப்பு ரத்து தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை



(கொழும்பு)

தபால் வாக்குச் சீட்டு புள்ளடியிடும் மையங்களில் ஏதாவது தலையீடுகளோ அல்லது அச்சுறுத்தும் முயற்சிகளோ இடம்பெற்றால், அந்த மையங்களில் இடம்பெற்ற வாக்களிப்பு இரத்துச் செய்யப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய எச்சரித்தார்.

"அரச பணியாளர்கள் தபால் வாக்குச் சீட்டுக்களில் தமது விருப்பத் தெரிவை குறிப்பிடுவதில், இரகசியத்தையும் சுதந்திரத்தையும் உறுதி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. யாருக்கு வாக்களிக்கப்பட்டது என்பதைக் கண்டறிய முடியாது.

தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள், எதிர்வரும் 31 ஆம் திகதியும் நவம்பர் முதலாம் திகதியும் வாக்களிக்க முடியும். பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள், நவம்பர் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் வாக்களிக்கலாம்.

இந்த நாட்களில் வாக்களிக்க முடியாதவர்களுக்கு, நவம்பர் 7 ஆம் திகதி வாக்களிக்க வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

தேர்தல் திணைக்கள அதிகாரிகளும் நவம்பர் 7 ஆம் திகதி வாக்களிக்க முடியும்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

### யாழ்.வைத்தியசாலையில் கொல்லப்பட்டவர்களுக்கு

# நினைவு மண்டபம் அமைக்க அடிக்கல் நாட்டியும் பயனில்லை

### அஞ்சலி நிகழ்வில் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்த போது இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட ஊழியர்களுக்கான தனியான நினைவு மண்டபம் அமைக்க அடிக்கல் நாட்டியும் பயன் எதுவும் கிடைக்கவில்லை என நேற்று இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் ஆதங்கப்பட்டனர்.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21, 22 ஆம் திகதிகளில் யாழ்.போதனா வைத்திய சாலையில் இந்திய அமைதிப் படையினரால் 21 ஊழியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு சுட்டுப்படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவாக நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் பலமுறை கோரியும் இதுவரை அமைக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் இந்திய இராணுவத்தால் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பல படுகொலைகள் மறைக்கப்பட்ட நிலையில் முதலாவது படுகொலையாகக் கொக்குவில் பிரம்படிப் படுகொலை அண்மையில் நினைவு கூரப்பட்டது.

இவ்வாறான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் உன்னதமான பணியில் ஈடுபட்ட வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் உட்பட 21 பேரை இந்திய இராணுவம் படுகொலை செய்தமையை எமது எதிர்கால சமூகத்திற்கும் தெரியப்படுத்த வேண்டும். எனவே அரசியல் தலையீடுகள் இன்றி உயிர் நீத்த ஊழியர்களின் நினைவாக யாழ். போதனா வைத்தியசாலையில் ஓர் நினைவு மண்டபம் அமைக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். (இ-10)

# கூட்டமைப்பின் நிலைப்பாடு வியாழனன்று வெளிவரும்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு நாளை மறுதினம் 24 ஆம் திகதி வியாழக்கிழமை வெளியிடப்படும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் என்பன 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டங்களின் பின்னர், எந்த வேட்பாளரை ஆதரிப்பது அல்லது ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறு செயற்படுவது என்ற முடிவு அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளும் ஐந்து தமிழ்க் கட்சிகளின் அமைப்பில் இணைந்திருக்கின்றன.

எனவே, ஐந்து கட்சிகளும் இணைந்தே முடிவை அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)








யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவரங்கம் யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் தமிழ்ச்சங்க உபதலைவர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் தனிநாயகம் அடிகளின் உருவச்சிலைக்கு அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளாரும் தமிழ்ச்சங்கத் தலைவர் ச.லலீசனும் மலர் மாலை அணிவித்தனர். சியன தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் சி. கேசவன் நினைவுப் பேருரையாற்றினார். தமிழ்ச்சங்கம் நடத்திய விவாதப் போட்டிக்கான இறுதிப் போட்டியும் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன், தமிழ்ச்சங்கப் பொருளாளர் பேராசிரியர் தி.வேல்நம்பி, செயலாளர் விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா, அகில இலங்கை இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவஸ்ரீ கு.வை.கா.வைத்தீஸ்வரக் குருக்கள், தமிழகப் பேச்சாளர் டாக்டர் வே.சங்கரநாராயணன், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பல்கலைக்கழக, ஆசிரிய கலாசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# வவுனியாவில் 46 பேருக்கு டெங்கு

## மக்களை அவதானமாக இருக்குமாறு சுகாதாரத்துறை எச்சரிக்கை

(குருமன்காடு)

வவுனியா நகரப்பகுதியில் 46 பேருக்கு டெங்கு நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அதிக வர்த்தக நிலையங்கள் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களாக அடையாளம் காணப்பட்டதாக மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரப்பகுதியில் டெங்கு நோயின் திடீர் பரம்பல் காணப்பட்டது. அதனை தொடர்ந்து வவுனியா பொது வைத்தியசாலையில்46 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

குறிப்பாக வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் அதிகளவாக டெங்கு தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர். டெங்குத் தாக்கத்திற்கு உள்ளானவர்களில் 33 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நகர்ப்பகுதிகளில் பொருட்கள் கொள்வனவில் ஈடுபட்டவர்கள் டெங்கு தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு மாணவர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதாரப் பரிசோதகர்கள் ஒன்பது பேரும் ஐந்து உதவியாளர்களும், பத்து குடும்பநல உத்தியோகத்தர்களும், ஆறு சுகாதாரப் பணி உதவியாளர்களும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளார்கள்.

வவுனியா நகரப்பகுதியில் 170 இடங்களில் நுளம்புகளின் குடம்பிகள் எடுக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டு அது டெங்கு நுளம்பு என பூச்சி ஆய்வாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நகரப் பகுதியில் கடைகளில் பணியாற்றுபவர்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.



சுகாதரப் பரிசோதகர்கள் நுளம்பு உள்ள இடங்களை கண்டுபிடித்து அவற்றை மாற்றம் செய்துள்ள போதும் டெங்கு நுளம்புகள் அதிகளவாக கடைகளுக்குள்ளே இருப்பதை எமது சுகாதாரப் பரிசோதகர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

கடைகளுக்குள் டெங்கு நுளம்புகள் அதிகளவாக இருப்பதால் நோயாளிகள் அதிகரிப்பதற்கு வாய்ப்புக்கள் இருக்கிறது. ஆகவே பொதுமக்களுக்கு சுகாதாரத்திணைக்களம் வேண்டுகோள் ஒன்றை விடுக்கிறது. நகர்ப்பகுதிக்கு வரும் பொதுமக்கள் நீளமான, தடித்த இறுக்கமற்ற உடைகளை அணிந்து வருவதன் மூலம் நுளம்புக்கடியிலிருந்து தங்களை பாதுகாக்க முடிவதுடன், நகர்ப் பகுதிக்கு வரும் பொதுமக்கள் குறுகிய காலப்பகுதியில் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்து நகரை விட்டு வெளியேறி அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் பாடசாலை மாணவர்கள் மாலை நேர வகுப்பிற்கு செல்லும்போது நீளமான, தடித்த உடைகளை அணிவதன் மூலம் நுளம்பு கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். அத்துடன் தனியார் கல்வி நிறுவனங்கள் காலைநேர மற்றும் மாலைநேர வகுப்புக்களில் நுளம்புத்திரிகளை பாவிக்க வேண்டும்.

பொதுமக்கள் தினமும் தாங்கள் வசிக்கும் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண் டும். குறிப்பாக குளிர்சாதனப் பெட்டியின் பின் பகுதிகள், தண்ணீர் தொட்டிகள், பூச்சாடி தொட்டிகள், கிணறுகள், கைவிடப்பட்ட மலசலகூடங்கள், நுளம்பு பெருகும் இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்துடன் டெங்கு நுளம்பு பரவாமல் இருக்க சகலரும் கிணறுகளில் மீன் வளர்க்க வேண்டும். அதற்கான மீன்களை எமது மலேரியா தடை இயக்கம் மக்களுக்கு தேவையான அளவு வழங்குவதற்கு தயாராக இருக்கிறது.

இனிவரும் காலத்தில் நுளம்பு பெருக்கச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க இருப்பதனால் 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அல்லது ஆறு மாதத்திற்கு குறையாத சிறைத்தண்டனை கிடைக்க வாய்ப்பிருப்பதால் பொதுமக்கள் தங்கள் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு அவர்மேலும்தெரிவித்தார். (9-250)

# எமது போராட்டங்களை மழுங்கடிக்கும் செயற்பாடுகள் வேதனை அளிக்கின்றது

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுடைய போராட்டங்களை கொச்சைப்படுத்தும் வகையில் பொய்யான கருத்துக்கள் திட்டமிட்டு பரப்பப்பட்டு வருகின்றமை தமக்கு வேதனையை ஏற்படுத்தியுள்ளதாக வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின்சங்கத்தலைவி யோ.கனகரஞ்சனி தெரிவித்துள்ளார்.

கடந்த கால யுத்தத்தின் போது, காணாமல் போன உறவுகளையும் இராணுவத்தின் கைகளில் ஒப்படைத்த எமது பிள்ளைகளையும் இதுவரை காணாமல் தேடி வருகிறோம். அரசிடமும் சர்வதேசத்திடமும் நாம் தொடர்ச்சியாக எமது கோரிகைகளை முன்வைத்து எமது போராட்டத்தை தொடர்ந்து வருகிறோம்.

இந்த நிலையில் அரசியல் காரணங்களுக்காகவும் சுய நலனுக்காகவும் சிலர் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் பெயரைப் பயன்படுத்தி தனித் தனிக் குழுக்களாக இணைந்து புதிய சங்கங்களை உருவாக்கி எமது பேராட்டங்களை கொச்சைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது எமது போராட்டத்தை நீத்துப்போகச் செய்வதற்கான சதியாக எமக்குத் தெரிகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய விடயம் தொடர்பான எமது அழுத்தம் இலங்கை அரசுக்கு பெரும் சவாலாக இருந்து வருகின்ற நிலையில் அரசு பொறுப்புக்கூறலில் இருந்து தப்பிப்பதற்காக எமது போராட்டங்களை மழுங்கடிப்பதற்கான செயற்பாடுகளை பல வடிவங்களில் முன்னெடுக்கின்றது.

பொதுமக்கள் இவற்றை இனங்கண்டு விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதுடன் எமது போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார். (9)

# முல்லைத்தீவிலுள்ள கிராமங்களுக்கு பேருந்து சேவையை ஏற்படுத்தித் தருமாறு அரச அதிபரிடம் பொது அமைப்புக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய கிராமங்களுக்கு முல்லைத்தீவில் இருந்து பேருந்து சேவைகள் நடத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. 2010 ஆம் ஆண்டில் இருந்து முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் பேருந்து சேவைகள் நடத்த வேண்டும் என கோரிக்கை தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வரும் நிலையிலும் பேருந்து சேவைகள் நடைபெறவில்லை. இதன் காரணமாக இக்கிராமங்களில் வாழ்கின்ற 450 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளன. புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலை, முல்லைத்தீவு பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் உட்பட அனைத்து இடங்களுக்குச் செல்வதற்கும் போக்குவரத்து நெருக்கடி காணப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர் முல்லைத்தீவு நகரில் இருந்து இரட்டை வாய்க்கால் வழியாக மாத்தளன் வரை இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவைகள் இடம்பெற்றன. தற்போது பேருந்துகள் சேவையில் ஈடுபடாததன் காரணமாக வலைஞர்மடம், அம்பலவன் பொக்கணை, மாத்தளன் ஆகிய பாடசாலைகளின் மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். (9-350)




# அடிப்படை வசதிகளின்றி இயங்கும் கிளி.கரியாலை நாகபடுவான் அ.த.க.பாடசாலை







(முறிகண்டி)

நாட்டில் பல்வேறு கல்வி அபிவிருத்தி சார்ந்த விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைஅடிப்படை வளங்கள் அற்று மிகவும் மோசமான நிலையில் இயங்கி வருவதாக பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஒரு பாடசாலைக்கு இருக்க வேண்டிய பல்வேறு பௌதீக வளங்களை குறித்த பாடசாலை இழந்துள்ளது. கிராமப்புற பாடசாலை என்பதால் புறக்கணிக்கப்பட்டுள்ளதா? எனும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பாடசாலையின் வகுப்பறைகள் தரம் பிரிக்கப்படாது காணப்படுகின்றன. தறப்பாள் கொண்டு குறித்த வகுப்பறைகள் தனித்தனியே பிரிக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள் கற்கக்கூடியவகையில் அவர்களின் இருக்கைகள், தளபாடங்கள் கற்றலிற்கு உகந்ததாகவோ, சுதந்திரமான கல்விக்கான வசதியாகவோ காணப்படவில்லை.

இந்த பாடசாலையில் விளையாட்டுத்துறையில் சாதிக்கக்கூடிய மாணவர்கள் காணப்படுகின்ற போதிலும் அவர்களால் சாதனை நிலைநாட்ட முடியவில்லை. உடற்கல்வி ஆசிரியர் பாடசாலையில் இல்லாத அதேவேளை விளையாட்டு மைதானமும் சீரின்றி காணப்படுகின்றது.

வலயம் மற்றும் மாவட்டத்தில் முதல் நிலை பெற்ற மாணவி ஒருவர் மேற்கொண்டு முன்னேறுவதற்கு பாடசாலை பௌதீக வளமே கை கொடுக்கவில்லை என தெரிவிக்கின்றார். இவ்வாறு பல்வேறு துறைகளில் சாதிக்கக்கூடிய மாணவர்கள் இவ்வாறான வளப் பற்றாக்குறை காரணமாக மழுங்கடிக்கப்படு கின்றனர் என மக்கள் தமது ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

குறித்த பாடசாலையின் அதிபர் விடுதி 55 வருடங்கள் பழைமைவாய்ந்த கட்டடம். அதில் எவ்வித அடிப்படை வசதிகளும் காணப்படவில்லை. குறித்த கட்டடத்தில்தான் ஆசிரியர்கள் தங்கி பாடசாலை கல்வியை மாணவர்களிற்கு புகட்டுகின்றனர்.

மழை காரணமாக குறித்த கட்டடத்தில் வெள்ள நீர் தேங்கி காணப்படுகின்றது. இடிந்து விழும் அபாயம் மற்றும் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பல்வேறு அசௌகரியங்களை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் எதிர்கொள்கின்றனர்.

இதுவரை பௌதீக வளப் பற்றாக்குறைகளை தீர்க்க எவரும் முன்வரவில்லை எனவும் பாடசாலையில் காணப்படும் பௌதீக வளங்களை சீர் செய்து கொடுக்க அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் குறித்த பாடசாலைக்கான அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஏற்படுத்தி கொடுக்கும் பட்சத்தில் அப்பகுதியில் உள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முழுமையாக முன்னெடுக்க முடியும் என பாட சாலை சமூகம் கோரிக்கை முன்வைத்துள்ளது. (9-100)

# கனகராயன் ஆற்றுப் பகுதியில் சிரமதானப் பணி முன்னெடுப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை கனகராயன் ஆற்றுப்பகுதியில் இலங்கை இராணுவத்தின் 573 ஆவது படைப்பிரிவினர், நீர்ப்பாசனத் திணைக்களத்தினர், பிரதேச மக்கள் இணைந்து நேற்று சிரமதானப்பணியினை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழுள்ள கனகராயன் ஆற்றின் இருமருங்கிலும் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதனால் மழைகாலங்களில் வெள்ளநீர் அடித்துச்செல்வதில் இடைஞ்சல்கள் காணப்படுவதுடன் இதனால் வெள்ளப்பெருக்குகளும் ஏற்படுகின்றன.

தற்போது பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ள நிலையில் வெள்ள நீர் கனகராயன் ஆற்றினூடாக இலகுவாகப்பாய்ந்து ஓடக் கூடிய வகையில் ஆற்றங்கரையில் இரு புறங்களிலும் உள்ள பற்றைகளை துப்புரவு செய்யும் வகையில் இச்சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 8.30 மணிக்கு ஆரம்பமான இச்சிரமதானப் பணியில் 573 ஆவது படைப் பிரிவின் பொறுப்பதிகாரி, கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் இராஜகோபு, கண்டாவளை கிராம உத்தியோகத்தர் மற்றும் இலங்கை இராணுவத்தின் 573வது படைப் பிரிவைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள், நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (9-315)

# முல்லை.சிறுகடல் பகுதிகளில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

## சிறுகடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக குற்றச்சாட்டு

(கண்டாவளை)

முல்லைத்தீவு நகரை அண்மித்த சிறுகடல் பகுதிகளில் பிளாஸ்ரிக் மற்றும் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என சிறுகடற்றொழிலாளர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தின் நந்திக்கடல் கரையோரப்பகுதிகளிலும் நகரை அண்மித்துக் காணப்படும் சிறுகடற்பகுதிகளிலும் கடற்கரையோரப் பகுதிகளை மாசுபடுத்தக்கூடிய பிளாஸ்ரிக் கழிவுகள்,கண்ணாடி கழிவுகள், மதுபான வகைகளின் வெற்றுப்போத்தல்கள், பொலித்தீன்கள், வீட்டுப்பாவனைக்கழிவுகள் என்பவற்றை சிலர் சட்டவிரோதமான முறையில் கொட்டி வருகின்றனர்.

இவ்வாறான கழிவுகள் கொட்டப்படுவதனால் இயற்கையாகவே மீன் உற்பத்தியாகும் இக்கடற்பகுதிகளும் அதன் சுற்றாடலும் மாசடையும் அபாயநிலை காணப்படுகின்றது. குறித்த கடற்பகுதிகளை பாதுகாக்கக்கூடிய வகையில் அனைவரும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்றும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து சிறுகடற் கரையோரப்பகுதிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கடற்றொழிலாளர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

## முதியோர் தின நிகழ்வு

(சிவநகர்)

சிவநகர் முதியோர் தின நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சிவநகர் மூத்தோர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவநகர் மூத்தோர் சங்கத்தலைவர் அ.இரகுபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் விவசாயத்திணைக்களத்தால் முதியோருக்கு மரக்கன்றுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன.

பிரதம விருந்தினராக வடமாகாண சமூகசேவைகள் திணைக்கள பணிப்பாளர் திருமதி.வனஜா செல்வரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி பிரதிமாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன், மகாதேவ ஆச்சிரம சிறுவர் இல்லம் தலைவர் பொன். நித்தியானந்தன். கிளிநொச்சி மாவட்ட சமூகசேவை அலுவலர் வே.தபேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(9-259)

# விழிப்புலன் மாற்றாற்றலுடையோருக்கான குற்றெழுத்து வழிகாட்டிப் பலகை திறப்பு

(நெளுக்குளம்)

"விழிப்புலன் மாற்றாற்றலுடையோருக்கான குற்றெழுத்து வழிகாட்டி பெயர்ப்பலகை" திறந்து வைக்கும் நிகழ்வு "மாற்று வலுவுள்ளோருக்கான வலுவூட்டல் அமையத்தின்" ஏற்பாட்டில் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் நேற்று மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்றது.





நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட வவுனியா மாவட்ட செயலாளர் எம்.கனீபா குற்றெழுத்து வழிகாட்டி பெயர்ப் பலகையினை திறந்து வைத்தார். இதன்மூலம் விழிப்புலனற்றவர்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள திணைக்களங்களுக்கு இலகுவாக பயணிக்கக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விசேட தேவையுடையவர்களிடம் ஏதோ ஒரு திறமை நிச்சயம் மறைந்திருக்கும். இதனை நாம் கண்டுகொண்டால் அவர்கள் எமக்கு பாரமாக இருப்பார்கள் என்ற சமூகத்தின் எண்ணத்தை அகற்ற முடியும். அந்த விடயத்தை கண்டுபிடிப்பது மாத்திரமே எமது நடவடிக்கையாக இருக்கவேண்டும். அதன்மூலம் இந்த நாட்டிற்கும் குடும்பங்களுக்கும் பொருளாதார ரீதியான நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அரச அதிபர் எம்.கனீபா இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்தார்.

நிகழ்வில் மதகுருக்கள், நகர சபை உறுப்பினர் ரி.கே.ராஜலிங்கம், சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீனிவாசன், உதவி மாவட்ட செயலர் ந.கமலதாஸ், மாற்றுவலுவுடையவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (9-299)

# கௌதாரிமுனை இயற்கை வளங்களை பாதுகாப்பது தொடர்பில் சிறப்பு ஆய்வு மேற்கொள்ள தீர்மானம்





(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்தின் வளம் நிறைந்த அழகிய கிராமமாகவும் அதிக மண் வளம் நிறைந்த பூர்வீக கிராமமாகவும் 3000 வருடங்களாக மக்கள் வாழ்ந்து வரும் இடமாகவும் கௌதாரி முனை காணப்படுகிறது.

பூர்வீக ஆலயமாக இருக்கும் மண்ணித்தலை சிவன் ஆலயம் இக் கிராமத்துக்கு பெருமை சேர்ப்பதோடு தொன்மை வாய்ந்த கிராமமாக திகழ்கின்றது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்த நிலையிலும் தற்பொழுது இக்கிராமத்தில் 135 குடும்பங்களே வசித்து வருகின்றார்கள்.

இக் கிராமத்தில் காணப்படும் இயற்கை வளங்களை சுரண்டும் பல்வேறு முயற்சிகள் பல்வேறுபட்ட தரப்பினராலும் மேற்கொள்ளப்படுவதோடு மக்களுக்கு அற்ப ஆசைகளைக் காட்டி அவர்களின் அறியாமையைப் பயன்படுத்தி கவனத்தை திசை திருப்பி அவ்விடங்களை அபகரிக்க பலர் முயற்சிக்கின்றனர்.

இலங்கையிலேயே சில இடங்களிலேயே காணப்படும் மண் வளம் இப்பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படுவதாலும் அழகான கடற்கரை சூழல் காணப்படுவதாலும் சுற்றுலா பயணிகள் மிகவும் விரும்பப்படுகின்ற இடமாக இது காணப்படுகின்றது.

குறித்த பிரதேச மக்களால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் குறித்த பகுதிக்கு கள விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த பிரதேச மக்களுடன் கலந்துரையாடி கௌதாரிமுனையின் இயற்கை வளங்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்குச் சென்று பார்வையிட்டனர்.

அத்துடன் குறித்த பகுதிகளில் முதலிட விரும்பும் முதலீட்டாளர்களுடைய கோரிக்கைகள் தொடர்பாகவும் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இயற்கை வளங்களை பாதுகாப்பான முறையில் கையாளும் வகையில் ஏதாவது முதலீடுகளை மேற்கொள்ள முடியுமா? என சிறப்பு குழு ஒன்று



அமைத்து அவர்களுடைய ஆய்வறிக்கை பெற்று மேலதிக நடவடிக்கை மேற்கொள்வது எனவும் குழுவால் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த கள விஜயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் ஐயம்பிள்ளை, கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுரேன், கரைச்சி பூநகரி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர்கள் மற்றும் தமிழரசுக் கட்சியின் மாவட்ட நிர்வாக உறுப்பினர்கள், கிராம பொது அமைப்புகள் என பலரும்கலந்து கொண்டனர்.(9-315)



# தருமபுரத்தில் நெசவுத் தொழிற்சாலை திறப்பு





(கிளிநொச்சி)

விசுவமடு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஏற்பாட்டில் தருமபுரம் பகுதியில் நெசவுத் தொழிற்சாலை ஒன்று புனர்நிர்மாணம் செய்யப்பட்டு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம்,சந்திரரத்ன பல்லேகமவினால் கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

தையல் தொழில், நெசவுத் தொழில், பின்னல் அலங்காரம், பன்ன வேலைகள், விவசாயம், முன்பள்ளி ஆசிரியர் பணி போன்ற தொழில்வாய்ப்பினை ஏற்படுத்தி சிவில் பாதுகாப்பு பிரிவினரால் மாதாந்த ஊழியம் வழங்கப்பட்டு வருவதாகவும் புனர்வாழ்வளிக்கப்பட்ட 3200 முன்னாள் போராளிகளுக்கு நிரந்தரமான அரச வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9)



**இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்" செயற்றிட்டத்தின் கீழ் மன்னார் வெள்ளாங்குளம் அ.த.க.பாடசாலை மாணவர்கள் 25 பேருக்கு பாடசாலை புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.**

# இந்திய இராணுவத்தின் பதிலடித் தாக்குதலில்
# 10 பாக்.வீரர்கள், 20 பயங்கரவாதிகள் உயிரிழப்பு

(டில்லி)

**பாகிஸ்தான் அத்துமீறி நடத்திய தாக்குதலுக்குப் பதிலடி வழங்கும் வகையில் இந்திய இராணுவம் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தான் வீரர்கள் 10 பேரும், பயங்கரவாதிகள் 20 பேரும் உயிரிழந்தனர்.**



மேலும் மூன்று பயங்கரவாத முகாம்களையும் இந்திய இராணுவத்தினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அழித்தனர்.

பாலகோட் தாக்குதலுக்குப் பின்னர் இந்திய இராணுவம் நடத்திய மிக முக்கியமான பதிலடித் தாக்குதலாக இது அமைந்தது.

ஜம்மு-காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியருகே பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி நுழைந்து நடத்திய தாக்குதலில் 2 இந்திய வீரர்களும், உள்ளூர்வாசி ஒருவரும் உயிரிழந்தனர்.

இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் இராணுவ நிலைகளைக் குறிவைத்தும், தங்கதார் செக்டாருக்கு எதிர்ப்புறமாக, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியிலுள்ள நீலம் பள்ளத்தாக்கில் இருந்த 4 பயங்கரவாத முகாம்களைக் குறிவைத்தும் இந்திய இராணுவத்தினர் பதிலடி வழங்கும் வகையில் தாக்குதல் நடத்தினர்.

இதன்போதே பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் 10 பேரும் பயங்கரவாதிகள் 20 பேரும் உயிரிழந்ததாக இந்திய இராணுவத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ-2)

# சிலியில் தொடரும் ஆர்ப்பாட்டங்கள்
## மூவர் உயிரிழப்பு; கட்டடத்தொகுதி எரிப்பு



(சாண்டியாகோ)

சிலியில் இரண்டாவது நாளாகத் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக இதுவரையில் மூவர் உயிரிழந்தனர்.

புகையிரதம் மற்றும் பேருந்து கட்டணங்கள் உயர்த்தப்பட்டதை எதிர்த்து மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

சில பகுதிகளில் புகையிரதம் மற்றும் பேருந்து நிலையங்கள் எரிக்கப்பட்டன.

போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் வெடித்த மோதலில் சிலர் காயமடைந்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சந்தைக் கட்டடத் தொகுதி ஒன்று தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

இதன்போதே குறித்த மூவரும் உயிரிழந்துள்ளனர். (ஐ-2)

# முதன்முதலாக வீரர்களின்றி வீராங்கனைகள் மட்டுமே விண்வெளியில் நடைபயணம்



(வோஷிங்டன்)

முதன்முதலாக அமெரிக்காவை சேர்ந்த வீராங்கனைகள் கிறிஸ்டினா கோச்சும், ஜெசிகா மெயிரும் சர்வதேச விண்வெளி நிலையத்தை விட்டு வெளியே வந்து நேற்று முன்தினம் நடைபயணம் மேற்கொண்டனர்.

அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்து ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த விண்வெளி நிலையத்துக்குள் தங்கியுள்ள வீரர்கள், வீராங்கனைகள், நிலையத்துக்கு வெளியே வந்து விண்வெளியில் நடந்தபடி பராமரிப்புப் பணிகளை கவனிப்பது வழக்கம்.

வீரர்கள், வீராங்கனைகள் இணைந்து விண்வெளியில் நடைபயணம் மேற்கொண்டனரே தவிர, இதுவரை வீராங்கனைகள் மட்டுமே தனித்து நடைபயணம் மேற்கொண்டதில்லை. இந்நிலையில் முதன்முதலாக அமெரிக்காவை சேர்ந்த வீராங்கனைகள் கிறிஸ்டினா கோச் சும், ஜெசிகா மெயிரும்சர்வதேச விண்வெளி நிலையத்தை விட்டு வெளியே வந்து நேற்று முன்தினம் நடைபயணம்மேற்கொண்டனர். (ஐ-2)

# பேருந்து கவி
# 20 பேர் உடல்

(கின்ஷானா)

ஜனநாயகக் குடியரசான கொங்கோ நாட்டில் ஏற்பட்ட பேருந்து விபத்தில் 20 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நேற்றுக் காலை லுஃபு என்ற இடத்தில் இருந்து தலைநகர் கின்ஷானாவுக்கு ஒரு பேருந்து பயணிகள் மற்றும் சரக்குகளுடன் சென்று கொண்டிருந்த வேளை பன்ஜா-குங்கு மாகாணத்திற்குட்பட்ட பகுதியில் சாரதியின்



# உலகிலேயே
# விமானப்பய

(நியூயோர்க்)

உலகிலேயே நீண்ட தூரம் மற்றும் நீண்ட நேரம் பயணிக்கும் விமான சேவையை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த குவான்டாஸ் விமான நிறுவனம் வெற்றிகரமாக சோதனை செய்தது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு புறப்பட்ட குறித்த விமானம் தொடர்ச்சியாக 19 மணித்தியாலங்கள் 16 நிமிடங்கள் வானில் பறந்து 16 ஆயிரத்து 200 கிலோ



**யுத்தக் குற்றவாளி பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ மீதான கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வாழ் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் பிரித்தானிய வெஸ்மினிஸ் னர்.**

# இரண்டாவது தடவை
# இந்தோனேசிய ஜனாதி



# ...விழ்ந்து விபத்து ...ல் கருகிப் பலி!



கட்டுப்பாட்டை இழந்து தலைகீழாக கவிழ்ந்து தீப்பற்றி எரிந்தது. இதில் 20 பயணிகள் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

தலைநகர் கின்ஷானாவில் இருந்து 150 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பன்ஜா-குங்கு பகுதியில் அடிக்கடி பேருந்து விபத்து ஏற்படுவது வழக்கமான ஒரு நிகழ்வாக மாறிவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ...ப நீண்ட தூர ...ணம் வெற்றி

...ரில் ...ரவு ...யாக ...கள் ...லோ

மீற்றர்களைக் கடந்து அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரைச் சென்றடைந்தது.

குறித்த விமானத்தில் 49 பேர் பயணம் செய்துள்ளனர்.

இந்தச் சோதனைப் பயணம் வெற்றிகரமாக அமைந்ததால், அடுத்த மாதம் இங்கிலாந்து தலைநகர் லண்டனில் இருந்து சிட்னிக்கு இடைநில்லா விமான சேவையை பரிசோதிக்கவுள்ளதாக குவான்டஸ் நிறுவனம் தெரிவித்தது. (ஜ-2)



...மீதான கொலை மிரட்டல் வழக்கு வெஸ்மினிஸ்டர் நீதவான் நீதிமன்றில் ...டது. அதே வேளையில் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிரான லண்டன் ...னிஸ்டர் நீதவான் நீதிமன்றம் முன்றலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட (ஜ-2)

# ...வயாகவும் பதவியேற்ற ...திபதி ஜோகோவிடோடோ



(ஜகார்த்தா)

இந்தோனேசிய ஜனாதிபதியாக ஜோகோ விடோடோ (Joko Widodo) இரண்டாவது தடவையாகவும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

ஜோகோவிடோடோவின் உயர்மட்ட பாதுகாப்பு அமைச்சரை கொலை செய்ய பயங்கரவாதிகள் முயற்சித்து ஒரு சில தினங்களில் இந்த பதவியேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

மற்றொரு தாக்குதல் நடத்தப்படக்கூடும் என்ற அச்சத்தால் 30 ஆயிரம் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மத்தியில் பதவியேற்பு நிகழ்வு இடம் பெற்றதாக சர்வதேச ஊட கங்கள் செய்தி வெளியிட்டன.

கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற தேர்தலில் 55.5 வீத வாக்குகளை பெற்று ஜோகோ விடோடோ வெற்றிபெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## தலையை நசுக்குவோம்

# பாதுகாப்பு மண்டலத்திலிருந்து வெளியேறுங்கள் குர்திஷ்களுக்கு எர்டோகன் எச்சரிக்கை



(அங்காரா)

வடக்கு சிரியாவின் பாதுகாப்பு மண்டலத்தில் இருந்து குர்திஸ் போராளிகள் பின்வாங்காத பட்சத்தில் அவர்கள் கடுமையான பின் விளைவுகளை சந்திக்க நேரிடும் என துருக்கி ஜனாதிபதி ரெசேப் தையீப் எர்டோகன் எச்சரிக்கை விடுத்தார்.

இன்று செவ்வாய்க்கிழமை மாலைக்குள் குர்திஸ் போராளிகள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

சிரியாவின் வடக்குப் பகுதியில் உள்ள குர்திஸ் படையினரை குறிவைத்து, துருக்கி ராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தியது.

அமெரிக்கா மேற்கொண்ட அழுத்தத்தை தொடர்ந்து, 5 நாட்களுக்கு போர் நிறுத்தத்தை துருக்கி அறிவித்தது.

இந்த 5 நாட்களுக்குள் பாதுகாப்பு மண்டலம் என வரையறுக்கப்பட்டுள்ள பகுதியில் இருந்து குர்திஸ்கள் வெளியேற வேண்டும் என துருக்கி ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

இந்நிலையில், போர் நிறுத்தத்தை மீறி குர்து படைகள் சினமூட்டும் வகையில் தாக்குதல்களை நடத்தியதாக துருக்கியின் பாதுகாப்பு அமைச்சு நேற்று முன்தினம் குற்றம் சுமத்தியது.

இது குறித்து ஜனாதிபதி எர்டோகன் கூறுகையில், "போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி குர்து போராளிகள் நடந்து கொள்ளவில்லை என்றால், நாங்கள் புறப்பட்ட இடத்துக்கு திரும்புவோம். குர்துக்களின் தலையை நசுக்குவோம்" என்று கடுமையாக எச்சரித்தார். (ஜ-2)

# கின்னஸ் சாதனை படைத்த பென்சில் சுவரோவியம்

(பியூனஸ் எயார்ஸ்)

பென்சிலால் வரையப்பட்ட சுவரோவியம் கின்னஸ் சாதனை படைத்தது.



ஆர்ஜென்டினாவின் எல்லைப் பகுதியில் 55 கலைஞர்களை கொண்டு பென்சிலால் வரையப்பட்ட சுவரோவியமே இவ்வாறு கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தது.

ஆர்ஜென்டினா - பராகுவே எல்லைப் பகுதியில் 16 அடி உயரத்தில் இரண்டரை மைல் தூரம் கொண்ட சுவர் கடந்த 2014ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

இருநாட்டு எல்லையிலுமுள்ள குறித்த சுவர் பெரிதாகப் பேசப்பட்டு வந்தாலும் இலத்தீன் அமெரிக்க நாடுகளிடையே பிரிவினையை ஏற்படுத்துவதாக தொடர்ச்சியாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

இந் நிலையில் குறித்த சுவரின் ஒரு புறத்தில் பல்வேறு வரலாற்று நிகழ்வுகள் பென்சிலினால் ஓவியமாக வரையப்பட்டன.

இவ்வாறு பென்சில் கொண்டு வரையப்பட்ட பகுதியே கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்தது. (ஜ)

# அபுதாபியில் 8 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான முத்து கண்டுபிடிப்பு



(அபுதாபி)

8 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான முத்து ஒன்று அபுதாபியில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதுவே உலகின் பழைமையான முத்து என தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

நவீன தொழில்நுட்பங்கள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் என இன்றைய உலகம் நவநாகரிகத்தோடு விளங்கினாலும், மனிதனின் தோற்றம் மற்றும் பழைமையான நாகரிகங்களை பற்றி அறிவதில் உலக நாடுகள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றன. தமிழகத்தின் கீழடி முதல் உலக நாடுகள் அனைத்திலும் நடந்து வரும் தொல்பொருள் ஆய்வுகள் இதையே கட்டியம் கூறுகின்றன.

இந்த ஆய்வுகளில் அடிக்கடி கிடைக்கும் பழங்கால அரிய பொக்கிஷங்கள், அரசுகளின் ஆவலை மேலும் தூண்டி விடுவதுடன், இத்தகைய ஆய்வுகளை மேலும் பரவலாக்கும் அவசியத்தையும் அளிக்கின்றன. அந்த வகையில் ஐக்கிய அரபு அமீரக தலைநகரான அபுதாபியில் 8 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான முத்து ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. (ஜ-2)

# தேர்தலைக் கண்காணிக்க 60 பேரை ஐரோப்பிய ஒன்றியம் அனுப்புகிறது

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க, ஐரோப்பிய ஒன்றியம், குறுகிய கால மற்றும் நீண்டகால அடிப்படையில் 60 கண்காணிப் பாளர்களைப் பணியில் அமர்த்தவுள்ளது.**

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு அணி ஒன்பது மாகாணங்களிலும் 30 நீண்ட கால கண்காணிப்பாளர்களைப் பணியில் அமர்த்தவுள்ளது.

தேர்தலுக்கு முன் இலங்கை வரும் மேலும் 30 பேர் கொண்ட குறுகிய கால கண்காணிப்பாளர் கள், நாடெங்கும் வாக்களிப்பு, வாக்கு எண்ணிக்கை, தேர்தல் முடிவு அறிவிப்பு தொடர்பான பணிகளைப் பார்வையிடுவார் கள்.



இலங்கையில் தேர்தல் கண் காணிப்பில் ஈடுபடவுள்ள ஐரோப் பிய ஒன்றிய கண்காணிப்பாளர் களுக்கு ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் போர்த்துக்கல் நாட்டுப் பிரதிநிதியான மரிசா மாட்டிஸ் தலைமை தாங்குவார்.

டிமித்ரா இயானோ துணைத் தலைமைக் கண்காணிப்பாளரா கச் செயற்படுவார் என்றும் அறி விக்கப்பட்டது. (இ-7)

# தமிழ்த் தலைமைகளின் கோரிக்கைக்கேற்ப பேச்சு நடத்த முடியாது-மகிந்தானந்த

(கொழும்பு)

13 ஆவது திருத்தத்தை மேலும் பலப்படுத்தி அமுலாக்கு வது பற்றி மாத்திரம் தமிழ்த் தலைமைகளுடன் பேச்சுவார் த்தை நடத்த முடியுமே தவிர, அதிகாரத்தை பிரிப்பது, சமஷ் டிக்குச்செல்வது பற்றியெல்லாம் பேச முடியாது. இவை கட்சியின் கொள்கைக்கு முரணானது என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந் தானந்த அளுத்கமகே சுட்டிக் காட்டினார்.

கொழும்பு பத்திரிக்கையொன் றிற்கு வழங்கிய விசேட செவ் வியிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிகாரப்பகிர்வு தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு முக்கியமாக இருந்தாலும் வடக்கு, கிழக்கு மக்களுக்கு அதிகாரப்பகிர்வு என்பது முக்கியமானதல்ல.

ஆட்சிக்கு வந்தவுடன் 19 ஆவது திருத்தத்தினை நீக்கி, நிறைவேற்று ஜனாதிபதி முறை மையைத் தொடர்ந்தும் இருக்க வேண்டுமென்பதே எங்களு டைய பிரதான நிலைப்பாடு.

நாட்டில் தற்போது இருக்கும் அரசியலமைப்பிற்குள்ளே தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வினை பெறமுடியும். முதலில் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான பேச்சுவார்த் தையினை மேற்கொள்ள



வேண்டும்.

இம்முறை ஜனாதிபதித் தேர் தலில் தமிழ், முஸ்லிம்களின் வாக்குகள் கோத்தபாய ராஜபக்ஷ விற்கே அதிகளவில் கிடைக்கும் எனவும் அவர் மேலும் தெரி வித்தார். (ஐ)

# கொழும்பில் பல வீதிகளில் வெள்ளம்

## சாரதிகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பு-குளியாப்பிட்டிய பிர தான வீதியின் நாத்தாண்டிய பழைய வீதிப்பகுதியில் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் போக் குவரத்து தடைப்பட்டது.

இந்நிலையில் குறித்த வீதி யில் பேருந்துகள் மட்டுமே பயணிக்க முடிவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் காரணமாக சாரதிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்து மாறு பொலிஸார் கேட்டுக்கொண் டனர். கொழும்பில் நேற்று முன் தினம் இரவிலிருந்து பெய்த கடும் மழை காரணமாக இந்த நிலை ஏற்பட்டது. (இ-7)



# கொலைச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரின் விளக்கமறியல் நீடிப்பு

(கொக்கல)

கொக்கல சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள ஆடைத் தொழிற் சாலையொன்றில் பணியாற்றிய பெண் ஒருவரை கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரின் விளக்கமறியல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

சந்தேக நபரை முன்னிலைப் படுத்தியதையடுத்து பதில் நீத வான் மேற்படி உத்தரவைப் பிற ப்பித்தார்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி வெலிகம பிரதேசத்தில் வசித்து வந்த 21 வயதுடைய பெண் ணொருவர் காணாமல் போன தாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்தது.

குறித்த சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகளை பொலிஸ்துறையினர் முன்னெ டுத்த போது, மேற்படி பெண் ணைக் கொலை செய்து அவரது உடற் பாகங்களை குழியில் போட்ட விடயம் தெரியவந் தது.

இதையடுத்து குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உத்தவ கீதை

அர்ச்சுனன் கேட்ட கேள்விக்கெல்லாம் பகவான் கண்ணன் பதில் சொன்னார். அதுக்குப் பேரு பகவத்கீதை. அதேமாதிரி உத்தவன் கேட்ட கேள்விக்கும் அவர் பதில் சொல்லியிருக்கின்றார். அதற்குப் பேர் உத்தவ கீதை.அதுசரி.. உத்தவன் யாரு?

கண்ணனுக்கு சின்ன வயதிலேயிருந்து தேரோட்டிக் கொண்டிருந்தவன் அவன் தானே!குருக்சேத்திரப்போர் முடிந்தது. அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டி, தருமனுக்கு முடி சூட்டினார் கண்ணபிரான். அதற்குப் பிறகு துவாரகைக்குத் திரும்பினார்.தான் வந்த காரியம் முடிந்தது.அதனாலே இளமையிலிருந்தே தனக்குத் தேரோட்டியாக இருந்து வந்த உத்தவனைக் கூப்பிட்டார். உனக்கு வேணும் என்பதைக் கேள்! என்றார்.

அவன் தனக்கு என்று எதையும் கேட்க ஆசைப்படவில்லை...! இருந்தாலும் கேள்வி கேட்கிறதிலே அவன் கெட்டிக்காரன். அதனாலே கேட்க ஆரம்பித்தான்.பரந்தாமா! இராச சூய யாகத்திற்கு தருமனைக் கூப்பிட்டு தன் அரண்மனையிலே விருந்து வைத்தான் துரியோதனன். அதற்குப் பிறகு சூதாட்டத்துக்குக் கூப்பிட்டான். தருமன் தோல்வியடைகிற மாதிரி செய்து விட்டான். நீங்கள் தான் முக்காலமும் உணர்ந்தவ ராயிற்றே... சூதாட்டத்திலே தருமர் வெற்றி பெறுவது மாதிரி செய்து இருக்கக் கூடாதா? பகடைக்காயை உருட்டுகிற பொழுது நீங்கள் எதிர்பார்த்தது விழுகிற மாதிரி செய்திருக்கலாமே!சரி...அதுதான் இல்லை...வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் இவர்களைப் பணயம் வைத்து ஆடுகின்ற பொழுதாவது காப்பாற்றியிருக்கலாம். அதையும் நீங்கள் செய்யவில்லை.பாவம்...அந்த அபலைப் பெண்! ஒன்றும் அறியாத உன் சகோதரி...திரௌபதி!

“அவள் அதிர்ஷ்டக்காரி! அவளை பணயம் வைத்து ஆடு... ஜெயித்துவிட்டால் இழந்த நாடு, நகரங்களையெல்லாம் திருப்பிக் கொடுக்கின்றேன்!” என்கின்றான் துரியோதனன். அந்த சமயத்திலேயாவது பாண்டவர்களுக்கு வெற்றி கிடைகிற மாதிரி செய்திருக்கக் கூடாதா?அப்பவெல்லாம் சும்மா இருந்துவிட்டு...அந்தப் பெண்ணை துச்சாதனன் இழுத்துக்கொண்டு வந்து துகிலை உரிகிற கட்டத்திலே காப்பாற்றினாயே...இது நியாயமா? முறையா? அறமா? இது தான் உத்தவன் கேட்ட கேள்வி!

இதற்குப் பரந்தாமன் பதில் சொல்கின்றான். அப்படிக் கேள் உத்தவா ! தருமனை துரியோதனன் சூதாட அழைக்கும் போது என்ன சொன்னான்? நான் பணயம் வைக்கின்றேன். எனக்குப் பதிலாக என் மாமன் சகுனி பகடைக்காய்களை உருட்டுவான்! என்று சொன்னான்.உடனே தருமன் என்ன சொல்லியிருக்கலாம்? எனக்குப் பதிலாக என் மைத்துனன் கண்ணன் பகடைக்காய்களை உருட்டுவான் என்று சொல்லியிருக்கலாமே! அப்படிச் சொல்லவில்லை! என்ன செய்தான் தெரியுமா? துரியோதனன் கூட சூதாட்டத்துக்கு சம்மதிச்சுட்டோம்; கடவுளே! இது என் மைத்துனன் கண்ண பிரானுக்குத் தெரியக் கூடாது என்று வேண்டிக் கொண்டான். இதனாலே தருமன் எனக்கு மனசாலே தடைபோட்டு விட்டான்.

அதனாலே அரண்மனைக்கு வெளியிலேயே என்னைக் கூப்பிடுவார்கள் என்று காத்துக் கொண்டிருந்தேன். பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன், திரௌபதி இவர்களை பணயம் வைத்து ஆடுகிற பொழுது கூப்பிடுவார்கள் என்று பார்த்தேன்.. அப்பவும் அவர்கள் என்னை நினைக்கவில்லை!

திரௌபதியை துச்சாதனன் கூந்தலைப் பிடித்து இழுக்கிறான். அப்ப கூட அவன் உடல் பலத்தாலே தடுக்க முயற்சி செய்தானே தவிர என்னை நினைக்கவில்லை! துரியோதனன் சபைக்கு இழுத்துச் செல்லப்பட்ட திரௌபதி. அறநூல்களையும் அரச நீதியையும் சொல்லிக்கொண்டிருந் தாளே தவிர என்னை நினைக்கவில்லை! துகில் உரிகிற கட்டத்திலே தான் ஹரி... ஹரி.. கண்ணா! பரந்தாமா! என்று கூப்பிட்டாள்! அதனாலே தான் அப்ப போய் நான் காப்பாற்றினேன்! என்றான் பரந்தாமன். அப்படி என்றால் நீ அழைச்சாத் தான் போவாயா? நீயாகப் போக மாட்டாயா? என்று கேட்டான் உத்தவன்.

“ஆமாம் ! நான் அழைச்சாத்தான் போவேன்.. மனிதர்கள் செய்யக் கூடிய செயல்களையெல்லாம் அவரவர் போக்கிலேயே விட்டுவிட்டுப் பார்த்துக்கொண்டிருப்பேன். நான் குறுக்கிட்டு ஒன்றுமே செய்ய மாட்டேன் என்றார் பரந்தாமன்.

மனிதன் தவறு செய்தால் திருத்தமாட்டாயா?

சும்மா பார்த்துக்கொண்டுத் தான் இருப்பாயா? என்று கேட்டான் உத்தவன். “நான் மனிதனுடைய உள்ளத்திலே இருக்கிறபோது என் எதிரிலே மனிதன் தவறு செய்ய மாட்டான் என்றான் கண்ணன்.

யார் நினைக்கிறாங்களோ அவர்கள் உள்ளத்திலேயெல்லாம் அவன் இருக்கிறான்... அப்படி இருக்கின்றபொழுது தவறு செய்ய மனிதன் அஞ்சுவான்!” இது தான் சேர் உத்தவகீதை.

இந்த காலத்திலேயும் சிலபேர் பகவான் மாதிரி அடுத்தவர்கள் கஷ்டப்படுவதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது உண்டு. அன்றைக்கு அப்படித்தான் சேர்.நடுத் தெருவிலே ஒரு திருடனை பிடித்து எல்லோரும் சேர்ந்து அடித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒருவர் மட்டும் தள்ளி நின்று அதை வேடிக்கை பார்த்து சிரித்துக் கொண்டிருக்கின்றான்.

“என்ன சேர் இது. பாவம் அந்த ஆளைப் போட்டு அப்படி அடிக்கிறார்களே என்றேன். பின்ன என்ன சேர் நான் ஒருத்தர் பையிலேயிருந்த பேர்ஸை எடுக்கிறதுக்கு முயற்சி செய்து கொண்டிருந்தேன். அதுக்குள்ளே அவன் முந்திக் கொண்டு அதை எடுத்து விட்டான். பார்க்கிறது நான் ... எடுக்கிறது அவனா? என்ன சேர் நியாயம் இது? நல்லா வாங்கட்டும்!” என்றான்.. பரந்தாமன் தான் இந்த உலகத்தை காப்பாற்ற வேண்டும்!

# நாட்டைப் பிளவடையச் செய்ய யாருக்கும் இடமளிக்க முடியாது

- 5 தமிழ்க் கட்சிகளின் கோரிக்கைகள் இதுவரை கிடைக்கவில்லை
- கூட்டமைப்பின் எந்தவொரு நிபந்தனைக்கும் கட்டுப்படுவதற்கு நாம் தயாராக இல்லை

## மாத்தறையில் மகிந்த திட்டவட்டம்



(மாத்தறை)

நாட்டைப் பிளவடையச் செய்வதற்கு யாருக்கும் இடமளிக்க முடியாது என பொதுஜன பெரமுனவின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

'வெற்றிகரமான நோக்கு - உழைக்கும் நாடு' என்ற தொனிப் பொருளில் மாத்தறை, தெவிநுவரவில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள 5 கட்சிகள் 13 கோரிக்கைகளை முன்வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் அந்தக் கோரிக்கைகள் எமக்கு இதுவரையில் கிடைக்கவில்லை.

தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்த செய்திகள் மூலமாகவே அறியக்கிடைத்தது. எனினும் அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவையும் எனக்கு இல்லை.

காரணம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எந்தவொரு நிபந்தனைக்கும் கட்டுப்படுவதற்கு நாம் தயாராக இல்லை என்பதை தெளிவாகக் கூறுகின்றேன். எமக்கு நாடு என்பது மிக முக்கியமானது. அதனை பிளவடையச் செய்வதற்கு யாருக்கும் இடமளிக்க முடியாது. நாட்டின் தனித்துவத்தை பாதுகாப்பதற்காக பாடுபடுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்க ஒருநாள் சேவை

(கொழும்பு)

சாதாரண தரப் பரீட்சையில் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் அடுத்த வாரம் தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்த மாணவர்கள் திணைக்களத்திற்கு விஜயம் செய்தும் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் திணைக்களத்தின் செயற்பாடு மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆணையாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார்.

இதுவரையில் விண்ணப்பித்த மாணவர்களுக்கு ஒருநாள் சேவையின் கீழ் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்க விசேட கருமபீடம் திறக்கப்பட்டது. அலுவலக நேரங்களில் மாணவர்களுக்காக 011 522 6115 என்ற அவசர தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் மூலம் தொடர்பு கொண்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டது. (இ-7)

# சந்திரிகாவுடன் இணைந்து சு.கவைப் பாதுகாப்பேன்

## வெல்கம திடசங்கற்பம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதற்காக எத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்கவும் பின்னிற்கப்போவதில்லையென களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளிநாட்டிலிருந்து நாடு திரும்பியதும் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்படுமெனவும் அதனையடுத்து பாரிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் வெல்கம தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் பலர் தற்போது பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்படுவதால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையையும் ராஜபக்ஷ குடும்பத்தினர் உரிமையாக்கிக்கொள்ளலாம் என்ற சந்தேகமுள்ளது.

இந்நிலையில் கட்சியைப் பாதுகாப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் கூறியதாக கொழும்பு சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டது. (இ-7)

# ஆறு வாகனங்கள் மோதி விபத்து சாரதிகளுக்கு அவசர எச்சரிக்கை

(கொழும்பு)

கஹதுடுவ நுழைவாயிலிலிருந்து 7 ஆவது கிலோமீற்றர் கல் அருகே ஆறு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

சீரற்ற வானிலை காரணமாக அதிவேக நெடுஞ்சாலை தெளிவின்றி காணப்படுவதால், நேற்றுத் திங்கட்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றது.

பேருந்தொன்றும் இரண்டு கார்கள், இரண்டு சிற்றூர்தி மற்றும் ஒரு ஜீப் வண்டியுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதனையடுத்து சீரற்ற வானிலை காரணமாக அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகனச் சாரதிகள் மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் வாகனங்களைச் செலுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவுறுத்தியது. (இ-7)



நாவாந்துறை கலைவாணி மைதானம் புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் திறக்கப்பட்டது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ்.மாநகரசபை முதல்வர் இ.ஆனல்ட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அடிக்கடி திறனாய்வுக்குள்ளாகும் 13 வது திருத்தம் - பகுதி I

## எது சரி எது பிழை - ஒரு தொகுப்பு

17

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**13 ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதிகாரமும் உள்ளடங்குகிறது. அனைத்து மாகாணங்களுக்கும் அதற்குரிய பொலிஸ் அதிகாரங்களை அமுல்படுத்துவதாயின் அதற்குரிய நியதிச் சட்டங்களைத் தயாரிக்க வேண்டும். ஆனால் எமக்கு ஒரு விடயம் தெளிவானது. அனைத்து மாகாணசபைகளிலும் பொலிஸ் ஆணைக்குழு இருப்பது தேவையற்றதெனவும் பொலிஸ் ஆணைக்குழு (தேசிய பொலிஸ் ஆணைக்குழு) இருப்பது போதுமானதென்பது தெளிவானது. பெரும்பாலான நடவடிக்கைகள் ஒருங்கியைப் பட்டியல் காரணமாகவே சீர்குலைகின்றன.**

மத்திய அரசு மாகாணசபை ஆகிய இரண்டும் ஒன்றாகப் பயன்படுத்தக் கூடியதென்பதனால் நிச்சயமற்ற தன்மை காணப்படுவதே அதற்குக் காரணமாகும். நீங்கள் ஒரு விடயத்தை மறக்கக்கூடாது. இந்த அதிகாரப்பகிர்வு முறைமை ஒற்றையாட்சி கட்டமைப்புக்கமையவே இந்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான அதிகாரப்பகிர்வு செயற்பாட்டின் போது அதாவது ஒற்றையாட்சி முறையில் எப்போதும் திட்டமிடல் அதிகாரம் (Planning Power) மத்திய அரசிடம் இருப்பதுடன் மாகாணசபைகளிடம் இரண்டாம் நிலை அதிகாரம் (Subsidiary Power) இருக்கும்.

இவ்வாறான நிலையில் இந்த அதிகாரப்பகிர்வு சட்டத்திற்கமைய மத்திய அரசு மாகாண சபைகளைக் கட்டுப்படுத்தலாம். முதலாவது வடகிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் தனியான ஈழ அரசைப் பிரகடனம் செய்ததனூடாக அவ்வாறான கருத்து உறுதிப்படுத்தப்படுகிறது அல்லவா என்று கேட்ட கேள்விக்கு பின்வருமாறு பதிலளித்தார்.

அந்தக் கருத்தின் மூலகர்த்தாவான வரதராஜப் பெருமாள் அவர்களை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும். அதுமட்டுமல்ல அந்தச் சம்பவம் தொடர்பில் அவருடன் கருத்துப் பரிமாற்றமும் செய்துள்ளேன். தான் அவ்வாறு செய்வதற்கான அதிகாரம் 13 ஆவது திருத்தத்தினூடாக இருக்கவில்லை என்று தெரிந்து வைத்திருந்ததாக அவர் என்னிடம் தெளிவாகக் கூறினார். ஆனால் தனது மாகாணசபை முன்மொழியும் எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்துக்கும் மத்திய அரசின் நிதியொதுக்கீடு வழங்காத நிலையில் வேறு எதனையும் செய்ய முடியாத நிலையே தனக்கு இருந்ததாக அவர் கூறினார். தன்னுள் ஏற்பட்ட விரக்தியை வெளிப்படுத்தும் ஓர் உத்தியே அதுவாகும். அதனைவிடவும் எந்தவொரு அதிகாரமும் இல்லாத சபையின் உண்மை நிலையை குறியீட்டு ரீதியாக உலகுக்கு வெளிப்படுத்துவதை அவர் எதிர்பார்த்திருக்கலாம்.

**அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் சம்பந்தமாக கலாநிதி ஐயம்பதி விக்கிரமரத்ன பாராளுமன்ற உறுப்பினரின் கருத்து.**

மத்திய அரசிற்கும் மாகாணங்களுக்குமிடையே மிகத் தெளிவாக அதிகாரங்கள் பகிரப்படாமையே 13 ஆவது திருத்தத்தில் காணப்படுகின்ற மிக முக்கியமான குறைப்பாடென்பதே எனது கருத்தாகும். இக் குறைபாடுகளை குறைப்பதற்கு இத்னோடு தொடர்பான ஒருங்கியைப் பட்டியல் (Concurrent List) அதாவது மாகாண சபையினாலும் மத்திய அரசாங்கத்தினாலும் பொதுவாக பயன்படுத்தப்படக்கூடிய அதிகாரங்கள் தொடர்பான பட்டியலை அதிலிருந்து அகற்றுமாறு நாம் முன்பிருந்தே யோசனை தெரிவித்துள்ளோம்.

ஆயினும் சர்வகட்சி மாநாட்டு யோசனைகள் போன்ற பயனுள்ள செயற்பாடுகள் செயலிழப்பதன் மூலம் அவ்வாறான யோசனைகளும் பயனற்றுப் போயுள்ளதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. 13 ஆவது திருத்தத்தில் எவ்வாறான குறைபாடுகள் இருந்தபோதும் அது இந்நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான உத்தேசத்தீர்வுத் திட்டத்தின் மிகவும் பயனுள்ள செயற்பாடு

**மத்திய அரசிற்கும் மாகாணங்களுக்குமிடையே மிகத் தெளிவாக அதிகாரங்கள் பகிரப்படாமையே 13 ஆவது திருத்தத்தில் காணப்படுகின்ற மிக முக்கியமான குறைப்பாடென்பதே எனது கருத்தாகும். இக் குறைபாடுகளை குறைப்பதற்கு இதனோடு தொடர்பான ஒருங்கியைப் பட்டியல் (Concurrent List) அதாவது மாகாண சபையினாலும் மத்திய அரசாங்கத்தினாலும் பொதுவாக பயன்படுத்தப்படக்கூடிய அதிகாரங்கள் தொடர்பான பட்டியலை அதிலிருந்து அகற்றுமாறு நாம் முன்பிருந்தே யோசனை தெரிவித்துள்ளோம்.**

என்பதில் விவாதத்திற்கிடமில்லை.

பொலிஸ் அதிகாரங்கள் மத்திய அரசிடமே காணப்பட வேண்டிய ஒன்று என மக்களிடத்தில் எடுத்துக் கூறப்பட்டாலும் சர்வதேச நிலைமை இதற்கு முற்றிலும் மாறுபட்டது எனக் கூறலாம். உதாரணமாக பல நாடுகளில் பொலிஸ் அதிகாரங்கள் என்பது மத்திய அரசு மாநில ரீதியான நிர்வாக அலகின் மூலம் செயற்படுத்தப்படும் ஓர் அதிகாரமன்றி அதனிலும் கீழ் மட்டத்தில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் செயற்படுத்தப்படுகின்ற ஓர் அதிகாரமாகும்.

கனடாவில் பொலிஸ் அதிகாரங்கள் Municipal Police என அழைக்கப்படும் நகர நிர்வாக அதிகார சபையின் மட்டத்திலான நிறுவனத்திற்குரியதாக இருப்பதுடன், சுவிட்சர்லாந்திலும் கென்ரன் எனப்படும் சிறு நிர்வாக அலகுகளிலும் கீழுள்ள பிரதேச மட்டத்திலான மிகவும் சிறிய நிர்வாக அலகுகளுக்கு அதன் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவில் அனைத்து பொலிஸ் அதிகாரங்களும் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டு மத்திய அரசு மத்திய புலனாய்வு பணியகத்தினூடாக (CIB) மத்திய அரசுடன் தொடர்பான புலனாய்வுகளை மேற்கொள்கிறதனைக் காணலாம். இவ் அனைத்து நாடுகளிலும் பொலிஸ் அதிகாரங்கள் இன்றி ஏனைய அனைத்து அதிகாரங்களும் ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்படுதலை காணலாம்.

13 ஆவது திருத்தத்திற்கு அமைவாக மாகாணப் பொலிஸ் ஏற்படுத்தப்பட்டாலும் அது இலங்கையின் தேசிய பொலிஸ்'டன் இணைந்த ஒரு பொலிஸ் அலகே ஒழிய வேறொன்றுமில்லை. அதன் பிரதான அதிகாரி பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் என்பதுடன் குறித்த பொலிஸ் அலகின் நடவடிக்கைகளின் நிர்வாகம் மாகாண சபைகளினூடாக மேற்கொள்ளப்படும். ஏனைய விடயம் யாதெனில் தேசிய பொலிஸ்'ம் குறித்த மாகாணத்திற்குள்ளேயே தங்கியிருக்கும் என்பதுடன் (11) பதினொரு குற்றச் செயல்கள் தொடர்பாக அவர்களே பணியாற்றுவார்கள் என்பதாகும்.

அரசாங்கத்திற்கெதிராக மேற்கொள்ளப்படும் குற்றங்கள் அதில் முதலாவதாகும். இது மிகவும் விரிவான ஒரு அர்த்தத்தினை கொண்டிருப்பதுடன் தேசிய பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கும் அல்லது அத்தியாவசிய சேவைகளை செயற்படுத்துவதற்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஏதேனுமொரு தவறினைப் புரிதல் இதில் எட்டாவது தவறாகும். குறித்த உப அட்டவணைக்கு ஏற்ப இம் மாகாண பொலிஸ்



கலாநிதி
ஐயம்பதி விக்கிரமரத்ன

அலகிற்குள்ள அதிகாரங்கள் எல்லைமீறிய ஒன்று அல்ல.

**நாங்கள் 13 ஆம் திருத்தத்தை விஞ்சிய ஒரு தீர்வை நோக்கி முன்னேற வேண்டும். கலாநிதி ரொஹான் எதிரிசிங்க கூறிய கருத்துக்கள்.**

சட்டத்தரணி ஜகத் வியனாராச்சி கலாநிதி ரொஹான் எதிரிசிங்கவை 13 ஆம் திருத்தம் சம்பந்தமாக பேட்டி கண்டபோது கலாநிதி ரொஹான் எதிரிசிங்க கூறிய கருத்துக்கள் 2009 ஜனவரியில் வெளிவந்த சமாதான நோக்கு எனும் இதழில் பிரசுரமாகியிருந்தது. அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அளித்த பதில்கள் கீழே தரப்படுகின்றன.

**கேள்வி-** 13 ஆம் திருத்தத்தில் அமுல்படுத்தப்படாதிருக்கும் பகுதிகள் எவை?

**பதில்-** ஆரம்பம் முதலே. அதாவது 1987 இலிருந்தே 13 ஆம் திருத்தத்தின் பிரதான இரண்டு பகுதிகளான காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இன்னமும் அமுல்படுத்தப்படாத நிலையிலுள்ளன. இவை மிகவும் முக்கியமான பகுதிகள் என்பதை நான் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். 13 ஆம் திருத்தம் அமுலுக்கு வரு முன்னர் நடைபெற்ற சம்பவங்களையும் இந்திய அரசிற்கும் இலங்கை தமிழ் அரசியல் கட்சிகளுக்குமிடையே நடைபெற்ற விவாதங்களையும் கருத்திற் கொண்டீர்களானால் பொலிஸ் மற்றும் காணி சம்பந்தமான பகுதிகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது உங்களுக்குத் தெளிவாகும். வடக்கு, கிழக்கின் சட்டம் மற்றும் ஒழுங்கைக் கண்காணிப்பதற்கு அதிகாரம் தேவையென தமிழ் கட்சிகள் விரும்பின. பொலிஸ் என்பது குறிப்பிட்ட சமூகத்திற்கு முற்றிலும் மாறானதாகவன்றி, சமூகத்துடன் ஒன்றிணைந்ததாகவும் அங்கு வாழும் மக்களின் மொழி தெரிந்த உறுப்பினர்களைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்பது தமிழ்த் தலைமைப் பீடத்தின் அவாவாக இருந்தது.

காணி சம்பந்தமாகப் பார்த்தீர்களானால், விஞ்ஞான ரீதியிலான மக்கள் தொகையினை நிர்ணயிக்கும் குடியேற்றத் திட்டமொன்று வடக்கில் நடைமுறையில் இருந்ததை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. சுயாட்சி முறையை நடைமுறைப்படுத்துவதற்கு எமக்கு காணி மீது குறிப்பிடத்தக்க ஆதிக்கம் இருக்க வேண்டும். இதனை அடைவதற்கு காணியின் உரிமை பற்றிய தெளிவான விளக்கம் கொண்ட உத்தியோகத்தர் அவசியம் என நான் நினைக்கிறேன். இவை இரண்டுமே இன்னும் நடைமுறைப்படுத்தப்படாத பிரிவுகள்.

**கேள்வி-** இந்தத் திருத்தத்தை அமுல்படுத்துவதில் இயற்கையாக அமைந்த தவறுகள் ஏதாவது சிக்கலை ஏற்படுத்துகின்றதா?

**பதில்-** அரசியல் ரீதியாக அதிகாரப் பகிர்ந்தளிப்பிற்கான விருப்பார்வம் இருக்கின்றதா? என்பது ஒருபுறம் இருக்க, 13 ஆம் திருத்தம் அதன் வடிவமைப்பு, எழுத்தாக்கம், சட்ட உடன்படிக்கை போன்ற துறைகளில் அடிப்படைக் குறைபாடுகளை உடையதாக இருக்கின்றது என்று நான் எப்போதும் வாதாடிக் கொண்டிருக்கின்றேன்.

முதலாவதாக, கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மீண்டும் இலகுவில் மத்திய அரசுக்கு மாற்றியமைக்கும் பலத்தை மத்திய அரசாங்கமும் அதன் பிரிவுகளும் கொண்டுள்ளன. உதாரணமாக 13 ஆம் திருத்தத்தின் பிரகாரம் பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் என்பன மாகாண சபையின் கீழ் வருகின்றன. ஆனால். அவை தேசிய பாடசாலையாகவோ தேசிய வைத்தியசாலையாகவோ பிரகடனப்படுத்தப்படுமிடத்து அவை மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்டவையாகின்றன.

**கனடாவில் பொலிஸ் அதிகாரங்கள் Municipal Police என அழைக்கப்படும் நகர நிர்வாக அதிகார சபையின் மட்டத்திலான நிறுவனத்திற்குரியதாக இருப்பதுடன் சுவிட்சர்லாந்திலும் கென்ரன் எனப்படும் சிறு நிர்வாக அலகுகளிலும் கீழுள்ள பிரதேச மட்டத்திலான மிகவும் சிறிய நிர்வாக அலகுகளுக்கு அதன் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.**

ஒரு பாடசாலையோ, வைத்தியசாலையோ தேசியமயமாக்கப்படுவதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய திட்டமான அளவீடு அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை. மத்தியில் உள்ள அரசாங்க அமைச்சரின் பிரத்தியேகமான கட்டுப்பாட்டுக்குள் இந்த அதிகாரம் அடங்குகின்றது.

**தொடரும்...**

# சஜித் ஜனாதிபதியான பின்னர் தோட்டத் தொழிலாளர்களுக்கு புதிய வேலைத்திட்டங்கள்

## நவீன் கூறுகிறார்



(ஹற்றன்)

சஜித் பிரேமதாஸவை எமது மக்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்த பின்னர் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு புதிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கப்பட வுள்ளதாக பெருந்தோட்டத் கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஹற்றன் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புதிய ஜனநாயக முன்னணி யின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள். அது தொடர்பில் புதிதாகக் கூறுவதற்கு எதுவும் இல்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு 500 ரூபாவிலிருந்து 720 ரூபாவிற்கு அவர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டது.

இருந்தாலும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பளம் போதாது. அமைச்சர் திகாம்பரம் உள்ளிட்ட மலையகத்திலுள்ள ஏனைய அமைச்சர்களும் நானும் இணைந்து பல்வேறு முறையில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகிறோம்.

முதலாளிமார் சம்மேளனத்தோடு புதிய வேலைத் திட்டங்களை நாங்கள் எப்படியாவது செய்து முடிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பொருளாளராக துமிந்த நியமனம்




(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொருளாளராக பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க நியமிக்கப்பட்டார்.

இதற்கு முன்னர் இந்தப் பதவி பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்சன யாப்பாவிடம் காணப்பட்டது. அவர் தற்போது பொதுஜன பெரமுனவில் இணைந்துள்ளதால் புதிதாக துமிந்த திஸாநாயக்க நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் இரவு திடீரென கூட்டப்பட்ட நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இந்தப் பதவி வழங்கப்பட்டதாக வீரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஏற்கனவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளராக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)





மறவன்புலவு சிவகவி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலய மாநாட்டு மண்டபத்தில் சிறுவர், மூத்த வழிகாட்டிகள் தினவிழா அதிபர் யோ.ஜெயகாந்தன் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை உரிமையாளர் அ.கிருபாகரன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களான கு.குகானந்தன்,அ.நிமலரோகன், தி.தங்கவேலு, விவசாய சம்மேளனத்தின் தலைவர் க.திருஞானசம்பந்தர், கலைமாமணி து.மாணிக்கவாசகர் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

# கழகமதைத் தன் வீடாய் நினைந்து போற்றும் கண்ணியனும் விண்சேர்ந்தான்!...




உலகமெலாம் நம் இசையின் புகழை நாட்டி
ஓயாது உழைத்த மகன் விண்ணைச் சேர்ந்தான்
கழகமதைத் தன் வீடாய் நினைந்து போற்றும்
கண்ணியனும் விண்சேரக் கலங்கிப் போனோம்
கலகலெனச் சிரித்தேதான் வார்த்தை பேசம்
கலைஞன் அவன் இல்லாத உலகுதானும்
நிலவதிலா வான் போல ஆயிற்றம்மா!
நெஞ்சமெலாம் இருள் சூழ்ந்து போயிற்றம்மா!

ஆங்கிலத்தார் வாத்தியத்தை அடக்கித்தானும்
அதில் எங்கள் அருமை மிகு இசையை ஏற்றி
ஓங்கு புகழ் வளர்த்தவனை உலகமெல்லாம்
ஒப்பற்ற கலைஞனென போற்றிற்றம்மா!
ஆங்கரிய புகழ் வளர்த்தும் அகத்தில் அந்த
ஐயனவன் துளி சுவட் பெருமையின்றி
பாங்குடனே அனைவரையும் அன்பால் ஈர்த்தான்
பரமபதம் தனைச் சேர பதறிப் போனோம்.

ஈழத்தில் எம் தமையே உறவாய் ஆக்கி
இதயத்தில் இடம் கொண்டான் இனிய நல்ல
வேழத்தை நிகர்த்து அவன் மேடையேற
விண் முட்டும் கரவோசை வியக்கும் வித்தை
ஆழத்தைக் கண்டவர்கள் அதிர்ந்து நிற்பார்
ஆ என்ற வாய்மூட மறந்து நிற்பார்
கோலத்தின் அழகதுவும் அருவி போலக்
கொட்டுகிற இசை அழகும் எவர்தான் மீட்பார்.

கம்பனுடைப் புகழ் விருதுதைக் கடந்த ஆண்டு
கண்ணியனே நீ வந்து ஏற்றுச் சென்றாய்
நம்முடைய பேறென்று மகிழ்ந்து போனோம்
நலத்தோடு மேடையில் வேந்தன் போல
எம்முடைய உளம் ஈர்த்தாய் இனிப்பாய்ப் பேசி
ஏற்றமிகு உரை செய்தாய் இதயம் ஈர்த்து
உம் பெரிய புகழ் நிறுத்தி போன ஐயா!
உலகமதைக் கடந்ததுவும் ஏனோ சொல்வீர்?

வித்தையதை விரல்களிலே வைத்து என்றும்
வியன் உலகை ஈர்த்தவனே விரும்பித்தானும்
பத்மஸ்ரீ விருதுன்னைத் தேடி வந்து
பலம் பெற்றுத் தனை உயர்த்திக் கொண்டதேயாம்
எத்தனையோ தேசம் உனை அழைத்துத் தங்கள்
இதயமதில் இருத்தித்தான் புகழே சேர்த்து
பக்தியுடன் வணங்கியதைக் கண்ணால் கண்டோம்
பார் கடக்க எங்ஙனமாய் முடிந்ததையா?

உன்னுடனே யாழ் அதனால் போட்டி கொண்டு
உடன் பிறப்பாய் இசை பொழிந்த நங்கைதானும்
அண்ணனவன் தனைப் பிரிந்து அதிர்ந்து நிற்பாள்
ஆங்கவளை எங்ஙனமாய் ஆற்றுவிப்போம்
விண்ணதிர இசைபொழிந்து வீறாய்ப் பண்பின்
விளை நிலமாய் எம்மனதை உயர்த்துவித்தீர்
கண்ணெதிரே விண்போகக் கலங்கி நின்றோம்
கதிரியரே உளம் உருகிக் கதறி நின்றோம்.


விரல் நிறைய மோதிரமும் விளங்கும் நல்ல
வீறான நெற்றியிலே திலகம் தானும்
நிரல் நிரலாய் மாலைகளும் நெஞ்சம் ஈர்க்கும்
நினைவதிலே மறையாத சிரிப்புத்தானும்
குரலதிலே வாராத இசையைக் கூட
கொட்டுகிற விரல் அசைவும் குன்றா தெம்மை
அரவணைத்து நின்றதுவாம் அன்பு தானும்
அகம் மறந்து போயிடுமோ! அழுது தீர்த்தோம்.


காலத்தை இசையதனால் வென்று நின்றாய்
கற்பகமாய் இசை அளித்துக் கனிந்து நின்றாய்
ஞாலத்தை உன் இசையால் ஈர்த்து நின்றாய்
நல்ல பல விருதுகளை ஏற்று நின்றாய்
தாளத்தை, சுருதியை தன்னுள் ஏற்று
தாளாத இசைக்கடலை விரித்து நின்றாய்
ஈழத்தை மனமதனில் ஏற்று நின்றாய்
எப்போதும் எம் மனத்தில் இருப்பாய் நீயே!

**கம்பவாரிதி இலங்கை. ஜெயராஜ்.**

# டெங்கு நோய் குறித்து விழிப்புணர்வுப் பேரணி








(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியில் கடந்த 15 ஆம் திகதி அதிபர் த.வாமதேவன் தலைமையில் நடைபெற்றது.

இதில் டெங்கு நோய் தொடர்பான கருத்தரங்கு மற்றும் தொடக்கப் பள்ளியிலிருந்து தெல்லிப்பழை பிரதேச செயலகம் வரை பேரணி என்பன இடம் பெற்றன.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி சி.சிவதாசன், யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ.ரவீந்திரன், தெல்லிப்பழை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ம.ராஜமேனகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிரமதானமும் இடம் பெற்றது. (இ-5)

# 3 பயனாளிகளுக்கு துவிச்சக்கரவண்டிகள்



(யாழ்ப்பாணம்)

போரால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களின் அன்றாடத் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கில் தாய்நிலம் அறக்கட்டளையின் கோரிக்கையின் அடிப்படையில் லண்டனில் உள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளரான கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் சமூக செயற்பாட்டாளரான எம்.அனீஸால் கடந்த வாரம் சாவகச்சேரியிலுள்ள தாய்நிலம் அறக்கட்டளை அலுவலகத்தில் வைத்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் மூவருக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

போரில் பெற்றோரை இழந்த விநாயகபுரம் இயக்கச்சியைச் சேர்ந்த மாணவன் ஒருவருக்கும், கிராஞ்சி சிவபுரம் பிருந்தாவன வீதிப் பகுதியில் வசிக்கும் பெண்தலைமைத்துவக் குடும்பத்தைச்சேர்ந்த மாணவன் ஒருவனுக்கும், நீர்வேலி அச்சலூர் வேணிபுரத்தைச் சேர்ந்த கணவன் காணாமல் ஆக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கும் குறித்த உதவி வழங்கப்பட்டது. (இ-9)

# இந்தியா பயணமானார் ருவான் பொலிஸ் பேச்சாளரானார் அஜித்

(கொழும்பு)

இந்தியாவின் தலைநகர் டில்லியில் அமைந்துள்ள தேசிய உளவுத்துறை கற்கை நிலையம் நடத்தும், கடும்போக்குவாதம் மற்றும் அதுசார்ந்த மறுசீரமைப்பு குறித்த விசேட பயிற்சி நெறியில் பங்கேற்க பொலிஸ் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர இந்தியா பயணமானார்.

இலங்கையில் பல்வேறு கடும்போக்கு சார் பரப்புரைகள் மற்றும் அமைப்புக்கள் தமது நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் நிலையில், இந்தியாவின் தேசிய உளவுத்துறை கற்கை நிலையம் இன்று முதல் எதிர்வரும் 25 ஆம் திகதிவரை நடத்தும் விசேட கற்கை நெறியில் பங்கேற்கவே அவர் இந்தியா பயணமானார்.


இந்நிலையில் அவர் இந்தியாவில் தங்கியிருக்கும் காலப்பகுதியில், பொலிஸ் திணைக்களத்தின் பதில் பேச்சாளராக முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் சட்டப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன நியமிக்கப்பட்டார்.

அத்துடன் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர பணிப்பாளராக செயற்பட்ட, பொலிஸ் ஊடகப் பிரிவு மற்றும் பொதுமக்கள் உறவுகள் பிரிவு ஆகியவற்றின் பதில் பணிப்பாளராக பொலிஸ் அத்தியட்சகர் அசோக தர்மசேன நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1865

### இனியா

அது பிடிக்காது, இது பிடிக்காது என்று அம்மாவிடம் சண்டை போட்டவர்கள் இன்று வெளிநாடுகளில் மனதிற்குப் பிடிக்காத உணவைக் கட்டாயமாகச் சாப்பிடுகின்றனர்



### அருண்



### கம்சன்

கத்தி எடுத்தவனுக்கு கத்திலதான்டா சாவு... ஏண்ணே அப்ப ஆடு கோழி எல்லாம் கத்தியோட தான் சுத்திக்கொண்டிருந்துச்சாண்ணே



### ராகவ்

வாலிபங்கள் ஓடும், வயதாகக்கூடும் ஆனாலும் கல்யாணம் ஆகாதே...



### வருண்

சில கஷ்டங்களை தீர்க்கக்கூடத் தேவையில்லை.. தோள்சாய்ந்து, தலைவருடி சொல்வதைக் கேட்க ஒரு உண்மையான உறவு இருந்தாலே போதும்



### ராகினி

நமக்காக உயிரையே கொடுக்கிறவர்களை நாம் எப்பவும் மறக்கவே கூடாது... அதனால்தான் எனக்கு ஆடு, மாடு, கோழி, மீன் எல்லாம் ஞாபகத்தில இருந்துகொண்டே இருக்கும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு ஒருபோதும் கூறமாட்டோம்

## யோகேஸ்வரன் திட்டவட்டம்

(ஏறாவூர்)

**தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு எக்காரணம் கொண்டும் மக்களிடம் கூறமாட்டோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.**


மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்று கட்சியாக இருந்த நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுப்பதற்காக ஐந்து கட்சிகளாக மாறியுள்ளோம்.

தற்போது இணைந்துள்ள கட்சிகளும் முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கட்சிகளாகவே உள்ளன. தமிழ் மக்களின் நலனை மையமாகக்கொண்டே நாம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். எங்களது மண்ணையும் உரிமையையும் சூறையாடுவதற்கு எந்தவொரு வேட்பாளருக்கும் இடமளிக்கமாட்டோம். அதே போன்று விரைவில் ஐந்து கட்சிகளும் இணைந்து யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்பதை மக்களுக்குக் கூறும்.

கடந்த காலத்தில் ஆட்சியாளர்களை கொண்டுவருவதற்கு மிகவும் கஷ்டப்பட்டோம். அதன் பலனை நாங்கள் அனுபவிக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக முடிவெடுக்கும்போது பல விடயங்களை ஆராய்ந்து



முடிவுகளை எடுப்போம். அதனை மக்களுக்கு தெளிவுபடுத்துவோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பதவி போனது பரவாயில்லை, இருப்பினும் அடிப்படையற்ற செயல் -இசுறு விமர்சனம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக எந்தவிதக் குற்றத்தையும் செய்யாதவன் என்ற வகையில், தனது பதவிகள் பறிபோனதற்கு கவலையில்லையென மேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பதவி மற்றும் மகரகம தொகுதி அமைப்பாளர் பதவி என்பனவற்றிலிருந்து இசுறு தேவப்பிரிய நீக்கப்பட்டார்.

இதற்கு கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர எடுத்த நடவடிக்கை எந்த அடிப்படையில் என்பது தெரியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்கும் வேட்பாளரை வெற்றிபெறச் செய்வதற்கு நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டதை நான் ஒரு குற்றமாக கருதவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்த யாழில் "கமசிமா" திட்டம் விரைவில்

## முதல்வர் ஆனல்ட் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்த ஜப்பான் அரசால் வழங்கப்படவுள்ள கமசிமா கழிவு முகாமைத்துவத் திட்டம் விரைவில் செயற்படுத்தப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையால் அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளை இயந்திர வலு மூலம் பசளையாக்கும் செயற்றிட்டத்திற்கு ஜப்பான் அரசு ஆதரவை வழங்கியுள்ளது.



இதன் மூலம் நாள் ஒன்றிற்கு 50-6[illegible] தொன் வரையிலான கழிவுகளை [illegible]ளையாக்கும் நடவடிக்கை இடம்பெறுவதோடு இத் திட்டம் ஏற்கனவே கரவெட்டிப் பிரதேச செயலகப் பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ்.மாநகர சபையால் சேகரிக்கப்படும் கழிவுகள் கல்லுண்டாய்ப் பகுதியில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அகற்றப்படுகிறது.

இவ்வாறான நிலையில் குறித்த "கமசிமா" திட்டத்தை செயற்படுத்தும் போது மாநகர சபைக்குச் சொந்தமாக சுமார் 100 ஏக்கர் காணி இருக்கவேண்டும்.

இந் நிலையில் கல்லுண்டாய் பகுதியில் குறித்த காணியை அடையாளப்படுத்தி இத் திட்டத்தை செயற்படுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# செய்தித்துளிகள்

## திருக்குறள் மனனப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

(கொழும்பு)

நவம்பர் நற்பணி மன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் ந.கருணையானந்தனின் அனுசரணையுடன் அகில இலங்கைக் கம்பன் கழகம் ஆண்டுதோறும் திருக்குறள் மனனப்போட்டியை நடத்தி வருகிறது. அப்போட்டித் தொடர் வரிசையில் 2019 ஆம் ஆண்டிற்கான மனனப்போட்டி 20.10.2019 அன்று நடைபெற்றது. அப்போட்டியில் வெற்றி பெற்ற போட்டியாளர்களின் விபரம் முதலாம் இடம்-கனிஷா இளங்கோவன், இரண்டாம் இடம்-பிருந்துஜன் பத்மசீலன், மூன்றாம் இடம்-கயல்விழி கோகுலக் கண்ணன், சிறப்புப் பரிசு பெறுவோர் லக்ஷ்மிதா பாலச்சந்திரா, பிரேமஹம்ஸினி தர்மேஸ்வரன், ஜதுஸ்மன் நாஜேந்திரன், தர்ஷன் சந்திரமோகன், வேதிகா ஸ்ரீஸ்கந்தா. (இ-7)

## கம்பன் விழா ஒத்திவைப்பு

(கொழும்பு)

நவம்பர் மாதம் 08,09,10,11,12 ஆகிய திகதிகளில் நடைபெறவிருந்த 2019 ஆம் ஆண்டிற்கான அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் கொழும்புக் கம்பன் விழாவைப் பிற்போட்டுள்ளதாகக் கம்பன் கழகம் அறிவித்தது. நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் பரபரப்புக்களுக்கிடையில் விழாவை நடத்துவது பொருத்தமில்லை என பலர் அபிப்பிராயம் தெரிவித்ததையிட்டு மேற்படி விழாவை வேறு ஒரு திகதியில் நடத்துவதெனக் கழக நிர்வாகம் தீர்மானித்தது. விழாத் திகதி நிச்சயிக்கப்பட்டதும் அது பற்றி அறியத்தரப்படும் என்று கழகத்தினர் அறிவித்தனர். (இ-7)

## கைதி தப்பியோட்டம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு சிறையில் தண்டனை பெற்றுவந்த கைதியொருவர் தப்பியோடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு திருப்பெருந்துறைப் பகுதியிலுள்ள பண்ணையொன்றில் வேலைக்காக கைதிகளை கொண்டுசென்ற வேளையில் குறித்த கைதி அங்கிருந்து தப்பியோடியதாக பொலிஸார் தெரிவித்தனர். சிறிய குற்றமொன்றிற்காக 3 மாதகாலம் சிறைத்தண்டனையை அனுபவித்து வந்த இவர் அக்கரைப்பற்று, ஒலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய முகமட் ஸ்மையில் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## அகலவத்தையில் தம்பதியினர் வெட்டிக்கொலை

(களுத்துறை)

களுத்துறை மாவட்ட அகலவத்தை பகுதியில் ஒரு தம்பதியினர் வெட்டிக் கொலை செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அகலவத்தையின் கிரிவானகெட்டியவிலுள்ள வீடொன்றிலேயே இவர்களின் சடலத்தை பொலிஸார் நேற்றுக்காலை மீட்டனர். இந்தச் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை கைதுசெய்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார் மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 110 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 125 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 210 | 250 |
| தக்காளி | 150 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 90 | 100 | 100 |
| கோவா | 140 | 90 | 160 |
| கரட் | 120 | 170 | 200 |
| பூசணி | 80 | 90 | 120 |
| புடோல் | 100 | 110 | 120 |
| வாழைக்காய் | 80 | 110 | 120 |
| சின்ன வெங்காயம் | 240 | 200 | 280 |
| பெரிய வெங்காயம் | 240 | 140 | 200 |
| பாகற்காய் | 350 | 220 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 120 |
| பயற்றங்காய் | 250 | 200 | 200 |
| லீக்ஸ் | 160 | 80 | 120 |
| பீற்றூட் | 90 | 70 | 120 |
| கறிமிளகாய் | 80 | 140 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 160 | 200 |
| போஞ்சி | 200 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 80 |
| கீரை -1பிடி | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 250 | 260 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 45 | 30-50 |
| இராசவள்ளி | — | 160 | — |
| வெங்காயப்பூ | — | — | — |
| முள்ளங்கி | 80 | 50 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 100 | 160 | 120 |




# வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2019

## ஓநாயும் ஆட்டுக்குட்டியும்



ஓர் ஆட்டுக்குட்டி ஒரு கால்வாயில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தது. அதை ஒரு பசியுள்ள ஓநாய் பார்த்தது. ஏதாவது ஒரு காரணம் காட்டி அதைத் தின்றுவிட விரும்பியது.

"நான் தண்ணீர் குடிக்கப் போகும்போது நீ தண்ணீரைக் கலக்கும்படி ஆயிற்றா?'' என்று கோபத்தோடு ஓநாய் கேட்டது.

"மன்னிக்க வேண்டும். தண்ணீர் நீங்கள் இருக்கிற இடத்திலிருந்துதானே இங்கே ஓடி வருகிறது. நான் எப்படிக் கலக்க முடியும்?" என்று பவ்வியமாய் ஆட்டுக்குட்டி கேட்டது.

"அதுசரி, ஆனால் ஒரு வருடத்திற்கு முன்பு என்னை நீ திட்டினியாமே?'' என்றது ஓநாய்.

"என்னை நம்புங்கள். நான் பிறந்தே ஆறு மாதங்கள் தான் ஆயிற்று'' என்று சொல்லிற்று ஆட்டுக்குட்டி.

"அப்படியானால் உன் சகோதரன் என்னைத் திட்டியிருக்க வேண்டும்''

''எனக்குச் சகோதரர் யாரும் இல்லையே!''

''உங்கள் கும்பலில் யாராவது சொல்லியிருக்க வேண்டும். வெறும் நொண்டிக் காரணங்கள் சொல்லி மழுப்பவா பார்க்கிறாய்?'' என்று கூறிக்கொண்டே ஓநாய், ஆட்டுக்குக்குட்டியின் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது.

**தீயவர்கள் தங்கள் தீய செய்கைகளுக்கு ஏதாவது ஒரு சாக்குப்போக்குச் சொல்வார்கள்.**

## மழை பெய்வது எப்படி?

மேகம் கறுக்க மழை பொழியும் என்பது பொது வழக்கு. மேகங்கள் மழையைப் பொழிகின்றன என்பதை இது குறிக்கின்றது. மேகங்களில் மழைத் துளிகள் உருவாவது நீண்ட சிக்கலானதொரு செயலாகும்.




கோடைகாலத்தில் ஆறுகள், ஏரிகள் மற்றும் கடலிலுள்ள நீர் சூரிய வெப்பத்தால் நீராவியாக மாறுகின்றது. நீராவி வளியுடன் கலக்கிறது. நீராவி வளியைவிட இலேசானது. எனவே அது ஆகாயத்தில் உயர எழும்பிச் செல்கிறது. சுற்றுச் சூழவுள்ள வளிமண்டலம் சற்றேனும் வெப்பம் குறையும் போது நீராவி மேகமாக உருக்கொள்கிறது. வளியில் புழுதித் துகள் கலந்துள்ளது.

மேகங்கள், வெப்பமான இடங்களிலிருந்து குளிர்ச்சியான இடங்களுக்குச் செல்லும் போது நீராவி, இத் துகள்களில் பற்றிக் கொண்டு கெட்டியாகிறது. இவ்வாறே மழைத் துளிகள் உருவாகின்றன. இத்துளிகள் மேலும் கெட்டியாகும் போது பூமியின் ஈர்ப்புச் சக்தி காரணமாக கீழே விழுகின்றன. இதைத்தான் நாம் மழை பொழிகிறது என்கிறோம்.

குளிர்ப் பிரதேசங்களில் மழைத்துளிகள் புழுதித் துகள்களின் மீது படிவது தவிர மேகங்களில் உண்டாகும் சிறு பனிக்கட்டிகளின் மீதும் உண்டாகின்றன. பனிக்கட்டிகளின் மீது படியும் நீரும் மழையாக நிலத்தின் மீது பெய்கின்றன.

மழை பொழிவதற்கு முதலாவதாக வெப்பமும் ஈரப்பதமும் கொண்ட வளி குளிர் மண்டலத்தில் வீச வேண்டும். அப்போது நீராவி கெட்டியாகிறது. மின்னலினால் வளியில் அயனிகள் உண்டாகும் போதும் நீராவி கெட்டியாகிறது.

## அப்பம்



அம்மா சுட்ட அப்பம் - மிக
அருமை யான அப்பம்,
சும்மா சொல்ல வில்லை - தேன்
சேர்ந்த சுவை அப்பம்.

ஒன்று தின்ற தங்கை - இன்னும்
ஒன்று கேட்டு அழுதாள்,
நன்று என்று சொல்லி - அம்மா
நாலு அப்பம் தந்தாள்.

அன்னை அன்பைச் சொல்லி - தங்கை
ஆடிப் பாடி நின்றாள்,
என்ன சொன்ன போதும் - அவள்
எங்கள் அன்னை தானே.

## முட்டையின் கேள்வி



உணவு விடுதியில் சமையல்காரர் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தார். அந்நேரம் சமையல் அறையின் உள்ளே யாரோ அழைக்கின்ற சப்தம் கேட்டது.

திடுக்கிட்ட சமையல்காரர் உள்ளே நோக்கினார். தட்டில் வெங்காயத்திற்கும் பச்சைமிளகாய்க்கும் நடுவில் இருந்த முட்டையானது அவரை நோக்கியது.

"ஐயா! நான்தான் அழைத்தேன்! இன்னும் சிறிது நேரத்தில் என்னை ''ஆம்லட்'' போட்டு விடுவீர்! அதற்கு முன்னர் உம்மிடம் பேசிட ஆசைப்படுகிறேன்!" என்றது.

''முட்டையே! நீ என்னிடம் தாராளமாகப் பேசிடலாம்!" என்றார் சமையல்காரர்.

உடனே முட்டை "ஐயா! நீர் எல்லோருக்கும் தேவையான உணவினை அவர்கள் பசி பொறுக்கும் முன்னர் செய்து கொடுக்கின்றீர்! ஆனால் நீர் சரியான நேரத்திற்கு சாப்பிடாமல் நேரம் கடந்து சாப்பிடுகின்றீர். தினமும் நேரம் கடந்து சாப்பிடுவதால் உமக்கு கிடைக்கின்ற சம்பளப் பணத்தில் பாதித் தொகையினை மருத்துவத்திற்குச் செலவு செய்கின்றீர்! உமது இந்த நிலை எனக்கு கவலையைத் தருகின்றது" என்றது.

சமையல்காரரோ ''முட்டையே! உனது கவலை நியாயமானதுதான். மற்றவர்களின் பசியைத் தீர்க்கும் மகிழ்ச்சியில் நான் உணவருந்த மறந்து விடுகிறேன். என்னை நினைத்து இது வரையிலும் இங்கு உணவருந்த வருகின்ற மனிதர்கள் யாருமே கவலைப்படவில்லை. ஆனால் நீ எனக்காக மனவருத்தமடைந்தாய்! உனக்கு இருக்கின்ற பாச உணர்வானது மற்றவர்களுக்கு இல்லை" என்றார்.

**கருத்து:- பிறர் மகிழ்ச்சியை பேணுகின்றவர்கள் தங்கள் மகிழ்ச்சியை நினைத்துப் பார்ப்பதில்லை.**

தனி,மனிதனின் தனி உரிமையான சிந்தனையால் சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை.

– ஐன்ஸ்டீன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# காலம் கடந்த ஒற்றுமையும் ஆபத்தைத் தர வல்லது

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது நம் தமிழ் மொழி கூறும் தத்துவம்.

ஒற்றுமையின் அவசியத்தை இந்த உலகுக்கு எடுத்துரைத்த நம் தமிழினத்தில் ஒற்றுமை இருக்கிறதா? என்பதுதான் கேள்வி.

இப்போது நாட்டில் நடைபெற இருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு தமிழ்க் கட்சிகள் கூட்டாகச் சேர்ந்து தமிழ் மக்கள் சார்பான கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் என்ற நிலையில், ஐந்து தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு 13 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தியுள்ளன.

எனினும் இக்கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்கள் எவருடனும் தமிழ்க் கட்சிகள் சந்திப்பையோ, பேச்சுவார்த்தைகளையோ நடத்தவில்லை.

நிலைமை இவ்வாறாக இருக்கின்ற போதிலும் தமிழ்க் கட்சிகளின் கோரிக்கையைப் பூதாகரமாக்கி ஏதோ ஐந்து தமிழ்க் கட்சிகள் இணைந்து இந்த நாட்டுக்குப் பேராபத்தை விளைவிக்கப் போவது போல தென்பகுதி முழுவதும் கூக்குரல் இடப்படுகிறது.

உண்மையில் தமிழ்க் கட்சிகள் தயாரித்த கோரிக்கைகள் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான அடிப்படை அம்சங்கள்.

எனினும் அந்தக் கோரிக்கைகள் எதனையும் சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்தாமல், ஐந்து தமிழ்க்கட்சிகளும் கூட்டாகச் சேர்ந்து முன்வைத்திருக்கும் 13 அம்சக்கோரிக்கைகள் ஆபத்தானவை எனப் பிரசாரம் செய்வதில் பேரினவாதிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இதில் தமிழ் அரசியல் கட்சிகளின் கோரிக்கைகளை ஏற்க முடியாது என்று சன்னதம் கொள்வோரும் உண்டு.

தவிர, தமிழ் அரசியல் கட்சிகளின் கோரிக்கைகளை ஜனாதிபதி வேட்பாளர்கள் நிராகரிக்க வேண்டுமென அஸ்கிரிய பீடாதிபதி அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார்.

என்ன செய்வது முப்பது ஆண்டு கால யுத்தம் முடிந்த பின்பும் பௌத்த சிங்களப் பேரினவாதம் அடங்குவதாக இல்லை. மாறாக இன்னும் வேகம் கொண்டு தமிழ் இனத்துக்கு எதிராக இனவாதத் தீயை தென்பகுதியில் மூட்டினால் மட்டுமே அரசியல் இருப்பைத் தக்க வைக்க முடியுமென்று சிங்கள அரசியல் கட்சிகள் தீர்மானித்துவிட்டன.

இத்தகைய நிலைமையின் பின்னால், தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமையின்மையும் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற சிந்தனையின்மையும் இருந்துள்ளதைக் கூறித்தானாக வேண்டும்.

ஆம், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தைக் காப்பாற்றிய போதெல்லாம் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளின் கருத்தைக் கேட்காமல் செயற்பட்டதும் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்று கூறியமையும் இன்று எங்களை எக்கதிக்குக் கொண்டு வந்து விட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆக, ஒற்றுமைப்படுதல் என்பது கூட உரிய நேரத்தில் நடந்திருக்க வேண்டும். காலம் அறிந்து செயற்படாவிட்டால் எல்லாமும் ஆபத்துத்தான் என்பதை இனிமேலாவது புரிந்து கொள்ளுங்கள்.

# ஐந்து தமிழ்க் கட்சிகளும் இந்திய அரசின் முகவர்கள்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட ஆவணத்தில் கையொப்பமிட்ட ஐந்து தமிழ்க் கட்சிகளும் இந்திய அரசின் முகவர்கள் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் எவ்வாறான முடிவுகளை முன்வைக்க வேண்டும் என்று ஆராய்ந்து ஆவணப்படுத்தும் கலந்தாய்வுக் கூட்டம் ஐந்து நாட்களாக இடம்பெற்றது.

இவ்வாறு இடம்பெற்ற கலந்துரையாடலின் மூலம் இறுதியாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு அதிலிருந்து வெளியேற்றப்படுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

ஐந்து கட்சிகளால் தயாரிக்கப்பட்டு கையெழுத்திட்ட அறிக்கை கொள்கை அளவில் இருக்குமே அல்லாமல் நடைமுறையில் எவ்வாறான முன்னேற்றங்களைத் தரப்போகின்றது என்பது கேள்வியே. புதிய அரசியல் அமைப்பு இடைக்கால அறிக்கையை நிராகரிக்க வேண்டும் என நாம் கோரிய போது ஐந்து கட்சிகளும் மறுத்து விட்டார்கள்.

தேசம், இறைமை என்ற கோட்பாட்டை நிராகரித்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட்ட விக்னேஸ்வரனின் கட்சியும் இணைந்து குறித்த ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் இறைமையை நிராகரித்து. இனப்படுகொலைக்கான சர்வதேச நீதிமன்ற விசாரணையை நிராகரித்தது.

தற்போது இந்திய அரசின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஐந்து கட்சிகளும் பல்கலைக்கழக ஆவணத்தில் கையொப்பமிட்டதன் மூலம் இந்திய மற்றும் மேற்கத்தேய வல்லரசுகளின் ஆதிக்கத்தை வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் அதிகரிக்கவே கையொப்பமிட்டுள்ளார்கள்.

இந்தியாவின் முகவர்களாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதி வேட்பாளரான கோத்தா சார்ந்து செயற்படும் சீனா மற்றும் அதன் நேச நாடுகளுக்கும் அடுத்த வேட்பாளரான சஜித் சார்ந்து செயற்படும் இந்தியா மற்றும் மேற்கு நாடுகளுக்கும் ஓர் அறைகூவலை விடுக்கவே இச்செயற்பாடு இடம்பெற்றது.

அதாவது ஜனாதிபதி வேட்பாளரான கோத்தபாய ராஜபக்ஸ இந்தியா மற்றும் மேற்கு நாடுகளின் நலனை ஆதரிக்காவிட்டால் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளை ஆதரிப்போம் என்ற செய்தியை ஐந்து கட்சிகளின் முகவர் ஊடாக உணர்த்தியுள்ளது.

ஐந்து கட்சிகளும் அரசியல் அமைப்பின் இடைக்கால அறிக்கையை நிராகரிக்கமாட்டோம் என்று சொல்வதும் கோத்தபாய சீனாவின் ஆதிக்கத்தை கைவிட்டு இந்திய மேற்குலக ஆதிக்கத்தின் வட்டத்துக்கு வர வேண்டும் என்றும் அவ்வாறு வந்தால் ஐந்து கட்சிகளையும் வைத்து ஒற்றை ஆட்சிக்குள் தமிழ் மக்களை புகுத்திவிடலாம் எனத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்தியா மற்றும் மேற்குலகின் நிகழ்ச்சி நிரலில் செயற்படும் ஐந்து தமிழ் கட்சிகளும் தமிழ் மக்களின் நலனில் எவ்வாறு அக்கறை காட்ட முடியும் என கஜேந்திரகுமார் மேலும் தெரிவித்தார். (ம-10)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தியது சந்திரிகாவே

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிளவுபடுத்தி புதிய கட்சியை ஏற்படுத்தியது சந்திரிக்கா குமாரதுங்கவே ஆவார். நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை துண்டாக்கவில்லை. நாங்களும் அந்த கட்சியின் பங்காளியாவோம் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீரவின் அகுனு கொலபெலஸ்ச இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த தேர்தல் காரியாலயத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி எமது தாய் வீடு. பண்டார நாயக்கவும் டீ.ஏ. ராஜபக்ஷவும் இணைந்து ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து வெளியேறி இதனை நிர்மாணித்தனர். அதனால் நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஒரு பகுதியினர். எமக்குள் இருக்கும் வித்தியாசம், நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையாததாகும். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் பொதுஜன பெரமுனவும் இணைந்திருப்பதால் நாங்கள் சக்திமிக்க கட்சியாக மாறி இருக்கின்றோம் என்றார். (ம-3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## கடவுள் மீது நம்பிக்கை இருந்தால்



கடவுள்மீது உங்களுக்கு நம்பிக்கையிருக்குமானால் இந்த உலகத்தில் உங்களுடையது என்று கருதுகின்ற எல்லாமே உண்மையில் அவருடையது என்று நம்புங்கள். மிகப்பெரிய பலவீனங்கள், சில வேளைகளில் மிகப்பெரிய நன்மையாகவும் சில நேரங்களில் மிகப்பெரிய வலிமையாகவும் வேடம் தரித்து வருகின்றன. நம்மை எதிர்பார்த்துச் சிலர் வாழ்கிறார்கள். நாம் ஒருவருக்கு நன்மை செய்ய முடியும் என்று எண்ணுவது பலவீனம். இதுவே நம்முடைய பற்றுக்கள் அனைத்துக்கும் பிறப்பிடம். இந்தப் பற்றின் மூலமே நமது துன்பங்கள் எல்லாம் வருகின்றன.

இந்தப் பிரபஞ்சத்தில் ஒருவர் கூட நம்மை எதிர்பார்த்து வாழவில்லை என்பதை நாம் நம் மனதிற்கு எடுத்துக் கூற வேண்டும். ஒரு பிச்சைக்காரன் கூட நம் தானத்தை எதிர்பார்த்து வாழவில்லை. ஒரு ஜீவன்கூட நம் கருணையை எதிர்பார்த்து வாழவில்லை. நம் உதவியை எதிர்பார்த்து ஓர் உயிர் கூட வாழவில்லை. அனைவருக்கும் இயற்கையே உதவி செய்கிறது. நம்மைப் போல் இலட்சக்கணக்கான மனிதர்கள் இல்லாவிட்டாலும் இயற்கை உதவிக் கொண்டுதான் இருக்கும். உங்களுக்காகவும் எனக்காகவும் இயற்கையின் போக்கு நிற்காது.

பிறருக்கு உதவுவது என்பது நம்மை நாம் பண்படுத்திக் கொள்வதற்காக நமக்குத் தரப்படுகின்ற மிகப்பெரும் பேறு.

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டிய மிகப்பெரிய பாடம் இது. இதை முழுமையாக அறிந்து கொண்டால் நாம் துயரடையவே மாட்டோம்.

சமுதாயத்தில் எங்கும் எவரோடும் சேர்ந்து வாழலாம். அதனால் தீங்கு நேராது. மனைவி, கணவன், வேலைக்காரர் பட்டாளம், அழகான வீடுகள் என்று நீ பெற்றிருக்கலாம். ஆனால் இந்த உலகம் உனக்காக அல்ல. நீ இருந்தேதான் ஆகவேண்டும் என்ற தேவையும் உலகிற்கு இல்லை என்ற கருத்தின் அடிப்படையில் நீ செயற்படுவாய் என்றால் இவற்றால் உனக்கு எந்தத் துன்பமும் வராது.

# வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

விடாமுயற்சி உள்ளவர்கள் வாழ்வில் எத்தனையோ சாதனைகளைப் படைத்திருக்கின்றனர்.ஆனால் வெறும்பணத்தை மட்டுமே உங்களின் வெற்றிக்கு அளவுகோலாக ஆக்கி விடாதீர்கள். -பரமஹம்ச யோகானந்தர்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில் சிறுப்பிட்டி, குட்டியப்புலம், சுதந்திரபுரம், ஈவினை, நிலாவரை, புத்தூர், கலைமகள், ஊரணி, வீரவாணி, வாதரவத்தை, ஆவரங்கால், அச்சுவேலி, பெரியபொக்கணை, கைத்தொழிற்பேட்டை அச்சுவேலி, செல்வநாயகபுரம், வயாவிளான் ஒரு பகுதி, கதிரிப்பாய், தம்பாலை, இடைக்காடு, வளலாய் ஒரு பகுதி, விஜிதா மில் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, செட்டிக்குளம் நகர பிரதேசத்தின் ஒரு பகுதி, உளுக்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மூர் வீதி, பெரிய காமம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.





பளுதூக்கல் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றுக்கொண்ட மு/தண்டுவான் அ.த.க.பாடசாலை மாணவி செ.ரிசபா கடந்த ஞாயிற்றுக்கிழமை கௌரவிக்கப்பட்டார். குறித்த கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் வடமாகாணசபை சுகாதார அமைச்சர் டாக்டர் சத்தியலிங்கம், கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்ட புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் சத்தியசீலன், இத்திமடு அ.த.க.பாடசாலை அதிபர், அலைகல்லுப்போட்டகுளம் அ.த.க.பாடசாலை அதிபர் ஆகியோர் சாதனையாளர்களை கௌரவித்தனர். 2019ஆம் ஆண்டு தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கும் போட்டியில் 59Kg நிறைப்பிரிவில் முதலாமிடத்தைப் பெற்று தங்கம் வென்ற தண்டுவான் அ.த.க.பாடசாலை மாணவி செல்வி. செ.ரிசபா மற்றும் மாணவி தங்கம் வெல்வதற்காக சிறந்த வழிகாட்டியாக செயற்பட்ட பாடசாலை அதிபர் கு.பஞ்சலிங்கம், மாணவியை சிறந்த முறையில் பயிற்றுவித்த ஆசிரியர்களான என்.குணாளன் ,செ.வினோதன் ஆகியோரும் 2019 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சிறப்புச்சித்தியடைந்த தண்டுவான் அ.த.க.பாடசாலை மாணவர்களான செல்வன். இசைப்பிரியன், செல்வன். நிஸ்மிதன், செல்வி. கம்சனா, அலைகல்லுப்போட்டகுளம் அ.த.க.பாடசாலை மாணவி செல்வி. அகழிசை ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

(க-281)

## தேசிய மட்ட பளு தூக்கல் போட்டி
## பாண்டியன்குள மாணவிகளுக்குத் தங்கம்



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கலில் முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் இரு தங்கப் பதக்கங்களை கைப்பற்றியது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டிகள் அண்மையில் பொலநறுவை றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.தர்சிகா 17 வயதிற்குட்பட்ட 49 கிலோ நிறைப் பிரிவில் சினெச் முறையில் 43 கிலோ பளுவையும் கிளின் அன் ஜக் முறையில் 54 கிலோ பளுவையும் ஒட்டு மொத்தமாக 97 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் 71 கிலோ எடைப் பிரிவில் ஈ.ஜீவிதா சினெச் முறையில் 40 கிலோ பளுவையும் கிளின் அன் ஜக் முறையில் 50 கிலோ பளுவையும் ஒட்டுமொத்தமாக 90 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் சுவீகரித்துள்ளனர்.

அத்தோடு அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் ஒட்டு மொத்தமாக புள்ளிகளின் அடிப்படையில் 3ஆம் இடத்தை பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (க)

## அரையிறுதியில் சைனிங்ஸ் அணி



பிரசாந்தின் இரட்டைக்கோல் மூலமும் உதயனின் சிறப்பான கோல் மூலமும் அனைத்து வீரர்களின் அசத்தல் ஆட்டம் மூலமும் றெயின்போ அணியுடனான போட்டியில் சிறப்பான வெற்றியு டன் அரையிறுதியில் சைனிங்ஸ் அணி.

வல்வை உதயசூரியன் கழகம் வல்வையின் அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் நடத்தும், அணிக்கு 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் சைனிங்ஸ் அணி றெயின்போ அணியை எதிர் கொண்டிருந்தது.

முதல் பாதியில் இரு அணியினரும் சமபலத்துடன் மோதிய போதும் சைனிங்ஸ் அணிக்காக உதயன் சிறப்பான கோலினை போட முன்னிலை வகித்தது சைனிங்ஸ் அணி.

பின்னர் இரண்டாவது பாதியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சைனிங்ஸ் வீரர்கள் ஆட்டத்தை தம்பக்கம் வைத்திருந்தனர்.

இரண்டாம் பாதியில் சைனிங்ஸ் முன்கள வீரன் பிரசாந் இரு கோல்களை அணிக்காக பெற்றுக்கொடுக்க 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு நுழைந்தது சைனிங்ஸ் அணி.போட்டியின் ஆட்ட நாயகனாக சைனிங்ஸ் அணியின் துடிப்பான வீரன் தீபன் தெரிவானார். (க)

## ரேவடி அணியை வெற்றி கொண்டு
## அரையிறுதிக்குத் தெரிவானது நேதாஜி



வல்வை உதயசூரியன் கழகம் வல்வையின் அங்கத்துவக் கழகங்களுக்கிடையில் நடத்தும், அணிக்கு 9 நபர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் ரேவடி விளையாட்டுக் கழகமானது நேதாஜி விளையாட்டுக் கழகத்தினை எதிர் கொண்டிருந்தது.

இப்போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய நேதாஜி அணி 4:1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றியை பதிவு செய்து அரையிறுதிக்கு முன்னேறியது. (க)

## மைதானத்தின் நாலாபுறமும்
## தெறிக்கவிட்ட உமேஸ் யாதவ்



டெஸ்ட் போட்டியில் விஸ்வரூபம் காட்டிய உமேஸ் யாதவ்விற்கு சமூகவலைத் தளங்களில் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

இந்தியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையேயான மூன்றாவது டெஸ்ட் போட்டி ராஞ்சியில் நடைபெற்று வருகிறது. அதன்படி முதல் இன்னிங்ஸின் இரண்டாவது நாளை தொடங்கிய இந்திய அணிக்கு ரோகித் மற்றும் ரஹானே சிறப்பான ஆட்டத்தை கொடுத்ததால். இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் இழப்பிற்கு 497 ஓட்டங்கள் குவித்து டிக்ளர் செய்தது.

இந்திய அணியில் ரோகித் சர்மா 212 ஓட்டங்களும், ரஹானே 115 ஓட்டங்களும், அதன் பின் வந்த ஓல் ரவுண்டர் ஜடேஜா 51 ஓட்டங்களும் எடுத்தனர்.

இவர்களைத் தொடர்ந்து வந்த வேகப்பந்து வீச்சாளர் உமேஸ் யாதவ் யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் 10 பந்துகளில் 31 ஓட்டங்கள் விளாசினார்.

அதில் ஐந்து சிக்ஸர்கள் அடங்கும், வந்த வேகத்தில் சிக்ஸர்களை பறக்கவிட்டு, தென்னாபிரிக்கா வீரர்களை மிரட்டிய உமேஸிற்கு சமூகவலைத்தளங்களில், பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

அதுமட்டுமன்றி ஒரு டெஸ்ட் போட்டியில் முதல் இரண்டு பந்துகளிலும் சிக்ஸர் அடித்த இரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமையையும், உலக கிரிக்கெட்டில் மூன்றாவது வீரர் என்ற சாதனையையும் உமேஷ் யாதவ் படைத்துள்ளார். (க)

## எந்த இடத்திலும் இறங்கி ஆட
## நான் தயாராக உள்ளேன்- சர்மா



தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசி டெஸ்டின் முதல் இன்னிங்சில், முதல் முறையாக இரட்டைச் சதம் விளாசியது குறித்து இந்திய வீரர் ரோஹித் சர்மா தெரிவித்துள்ளார்.

அதிகபட்சமாக ரோஹித் சர்மா 212 ஓட்டங்களும், ரஹானே 115 ஓட்டங்களும் விளாசினர். ரோஹித் சர்மாவுக்கு இது முதல் டெஸ்ட் இரட்டை சதம் ஆகும்.

இந்த சதத்தின் மூலம் அவர் பல்வேறு சாதன்னகளை படைத்தார். ஏற்கனவே, ஒருநாள் போட்டியில் மூன்று முறை அவர் இரட்டை சதம் விளாசியுள்ளார்.

இந்நிலையில், டெஸ்ட் இரட்டை சதம் குறித்து ரோஹித் கூறுகையில், 'தொடக்க ஆட்டக்காரராக மட்டும் சிறப்பாக விளையாட வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. அனைத்து இடங்களிலும் சிறப்பாக விளையாட வேண்டும் என்று தான் நினைப்பேன்.

தற்போது நான் மூன்று டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கியுள்ளேன். இன்னும் நிறைய போட்டிகள் விளையாட வேண்டும். அதனால் என்னுடைய தொடக்க ஆட்டம் குறித்து தற்போது எதுவும் பெரிதாக கூற முடியாது. (க)

## மரண தண்டனை...

வதற்கு முன்னர் ஒருவருக்கேனும் தூக்கு தண்டனையை நிறைவேற்றுவேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற தேசிய இளைஞர் மாதிரி ஐக்கிய நாடுகள் சபையின் மூன்றாவது மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

போதைப்பொருளிலிருந்து நாட்டின் இளைஞர் தலைமுறையை மீட்பதற்காக அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனையை வழங்குவதற்கு தீர்மானித்தபோதும் அதற்கெதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டதுடன், அந்த வழக்குத் தீர்ப்புக்கு தலைசாய்க்க வேண்டியுள்ளது.

சிலவேளை போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனை வழங்குவதற்கு சார்பாக அந்த வழக்குத் தீர்ப்பு கிடைக்கப் பெற்றால் பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் இந்த நாட்டின் இளைஞர்களுக்காக ஒரு போதைப்பொருள் கடத்தல்காரருக்கேனும் மரண தண்டனை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்றார். (ம-3)

## நீதிமன்றில் ஆஜ...

உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஞானசார தேரர், முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு மனு அண்மையில் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த நீதிமன்ற அவமதிப்பு மனு, மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதியரசர்கள் யசந்த கோதாகொட மற்றும் அர்ஜுன ஒபயசேகர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுவுக்கு ஆதரவாக ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன், சட்டத்தரணி கேசவன் சயந்தன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது, பிரதிவாதிகளை நவம்பர் 8 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு நீதியரசர்கள் உத்தரவு பிறப்பித்தனர். (ம-3)

## கோண்டாவிலில்...

கொலை செய்துள்ளான். அவன் பெண்ணை இழுத்து வந்து உடையை அகற்றி, வயிற்றுப் பகுதியில் நெருப்புத் தணல் உடைய கட்டையால் சூடு வைத்து பெரும் சித்திரவதை செய்துள்ளான் என்று நீதி விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

வயோதிபப் பெண் அணிந்திருந்த சங்கிலி மற்றும் காப்புகள் என்பனவற்றையும் கொலைகாரன் அபகரித்துச் சென்றுள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் தனிமையில் வசித்த வயோதிபப் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் நேற்றுக் காலை சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயாரான புண்ணியானந்தம் சந்திராதேவி (வயது-61) என்ற வயோதிபப் பெண்ணே வெட்டுக் காயங்களுடன் வீட்டு முற்றத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

வயோதிபப் பெண் சடலமாக மீட்கப்பட்ட இடத்தில் இருந்து கூரிய ஆயுதத்தையும் யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸார் மீட்டனர். இக்கொலைச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாணம் நீதிவான் அ.பீற்றர் போல், சட்ட மருத்துவ நிபுணர் உ.மயூரதன் ஆகியோர் நீதி விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பெண்ணின் சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க யாழ்ப்பாணம் நீதிவான் உத்தரவிட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்ட நீதிவான், சட்ட மருத்துவ அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கினார். (ம-3,10)

## அத்தியாவசிய...

தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் தற்போது 450 - 500 ரூபாயிற்குள்ள காய்ந்த மிளகாயின் விலையை குறைப்பதை முன்னிட்டு இறக்குமதி செய்யப்படும் காய்ந்த மிளகாய் ஒரு கிலோவிற்கான வரி 25 ரூபாயில் இருந்து 5 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இறக்குமதி செய்யப்படும் மீன் ஒரு கிலோவிற்கான வரி 100 ரூபாயில் இருந்து 25 ரூபாயாக குறைப்பதற்கு வாழ்க்கை செலவுக்கான குழு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் பீ.ஹெரிசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கோழி மற்றும் முட்டை விலையை கட்டுப்படுத்துவதற்காக அவற்றை இறக்குமதி செய்வதற்கும் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்க களஞ்சியசாலையில் உள்ள 48,000 மெட்ரிக் தொன் நெல்லை சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களின் உதவியுடன் அரிசியாக மாற்றி சதொச ஊடாக, நாடு ஒரு கிலோ 80 ரூபாயிற்கும் சம்பா ஒரு கிலோ 85 ரூபாயிற்கும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## 140 முறைப்பாடு...

தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டு (பப்ரல்) அமைப்பின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அவற்றில் அரச சொத்துக்களை சட்ட விரோதமான முறையில் பாவித்தல் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றாமை தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ம-3)

## ஜனாதிபதித் தேர்...

கட்சித் தலைவர் இல்லாமல் தேர்தல் இடம்பெறவுள்ளது.

பல வேட்பாளர்கள் களத்தில் இருந்தாலும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தி சார்பாக அநுர குமார திசாநாயக்க ஆகியோரே முதன்மை வேட்பாளர்களாக இருக்கின்றனர்.

இருப்பினும் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையில் பலத்த போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-3)

## கோரிக்கைகளில்...

வடக்கு கிழக்கின் தமிழ்த் தரப்பு 13 கோரிக்கைகளை ஜனாதிபதி வேட்பாளர்களிடம் முன்வைத்துள்ளனர்.

இதில் வடக்கு கிழக்கு இணைப்புக் கோரிக்கைக்கு நாம் இணங்கவில்லை. வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் ஆகவே அதனை எமக்கு தாருங்கள் என்பதே அவர்களின் கோரிக்கையாக உள்ளது. கிழக்கில் முஸ்லிம் மக்கள் அதிகமாகவும் சிங்களவர்கள் ஓரளவு வாழ்கின்றனர். திருகோணமலையை எடுத்துக் கொண்டாலும் யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கு சிங்களவர்கள் வாழ்கின்றனர். ஆகவே அவர்களை நிராகரித்து வடக்கை தனி அலகாக அங்கீகரிக்க முடியாது.

எனினும் தமிழர் தரப்புமுன்வைத்த பல கோரிக்கைகள் நியாயமானதாக உள்ளது. வடக்கின் தனியார் நிலங்களை மீண்டும் அவர்களுக்கு கொடுக்க வேண்டும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதும் நியாயமானது. இப்போது இவ்வாறான மோசமான சட்டம் தேவையில்லை. அதேபோல் இப்போது கொண்டுவரும் சட்டமும் மோசமானது அதனை நாமும் எதிர்க்கின்றோம்.

மேலும் வடக்கு கிழக்கு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். அவர்களை பாதுகாக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

ஆகவே தமிழ்க் கட்சிகளின் 13 கோரிக்கைகளில் பிரதான காரணிகளுடன் நாம் முரண்படவில்லை. ஆனால் வடக்கு கிழக்கு இணைப்பு மாத்திரம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்றும் சுட்டிக் காட்டினார். (ம-3)

## பிரபாகரனைவிட...

கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், தனி ஈழம் வேண்டும் என்ற கோரிக்கையினை முன்னிலைப்படுத்தியே விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரபாகரன் ஆயுதமேந்தி 30 வருட காலம் போராடினார். இறுதியில் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லாதொழிக்கப்பட்டது.

பிரபாகரன் முன்வைத்த கோரிக்கைகளை காட்டிலும் பாரதூரமான கோரிக்கைகளையே தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்வைத்துள்ளன என்றார். (ம-3)

## எந்த வரப்பிரசாத...

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் மகளிர் விவகார கொள்கைப் பிரகடனம் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே சஜித் பிரேமதாஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

தாம் ஜனாதிபதியானதன் பின்னர், ஜனாதிபதிக்கான எந்த ஒரு வரப்பிரசாதங்களையும் பெற்றுக் கொள்ளப் போவதில்லை.

அவை அத்தனையையும் பொதுமக்களுக்கே வழங்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## இளைஞன்...

மடைந்தவராவார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,10,299)

## வெற்றிக்கு...

ளார்.

டுவிட்டரில் கருத்து தெரிவித்தபோதே மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இவ்வாறு கூறினார். (ம-3)

## ஐ.தே.க பொய்...

வேண்டும் என்ற நோக்கில் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியினர் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சூரியவெவ பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நாம் 30 வருடங்களாக புரையோடிப் போயிருந்த கொடிய யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்துள்ளோம்.

இதற்காக கோத்தபாய ராஜபக்ஷ பாரிய அர்ப்பணிப்புக்களை செய்திருந்தார். எனினும் அவர் இன்று அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

வழக்குத் தாக்கல் செய்தேனும் கோத்தாவின் பயணத்தை தடுத்துவிடலாம் என கருதினார்கள். ஆனால், அது முடியாது போனவுடன், தற்போது பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார்கள். இதனை நம்பி மக்கள் ஏமாந்துவிடக்கூடாது என்று நாம் கேட்டுக் கொள்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## இராணுவத்தின...

பதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பெலியத்த நகரில் நேற்று இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-3)


### மெகா பவர்

திகதி 2019/10/21
சீட்டிழுப்பு இலக்கம் 0448
வெற்றி எழுத்து A | சுப்பர் இலக்க 21 | வெற்றி இலக்கங்கள் 52 54 62 64

### சுபிரி வாசனா

திகதி 21/10/2019
சீட்டிழுப்பு இலக்கம் 1471
எழுத்து 02 | வெற்றி இலக்கம் 01 10 11 59 | 43 46
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2019/10/21
சீட்டிழுப்பு இலக்கம் 4032
ஆங்கில எழுத்து L | வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 8 1 7 5 5
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள் (NLB)

சீட்டிழுப்பு திகதி 21-10-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2277
ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கங்கள் 01 32 40 59
தேசிய லொத்தர் சபை

### ராசி அதிர்ஷ்டம்

திகதி 21/10/2019 | வெற்றி வாரம் 2654 | வர்ணம் மஞ்சள்
விருச்சிகம் | வெற்றி இலக்கங்கள் 02 16 20 53
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,713,970
2019/10/22 ம் திகதி செவ்வாய் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

சீட்டிழுப்பு இல: 768
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.10.21
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 56,588,445/-
வெற்றி இலக்கங்கள் 07 34 42 48 | ஆங்கில எழுத்து L
விசேட வெற்றி இல. 2930
அபிவிருத்தி லொத்தர் சபை — 0114 825 825

### சனிக்கிழமை அதிர்ஷ்டம் (SATURDAY FORTUNE)

சீட்டிழுப்பு இல.: 3251 | திகதி: 2019.10.21 | திங்கட் கிழமை | நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 05 09 65 74 V | போனஸ் இலக்கம் 25 | அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட் 65,970,070/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1062
சீட்டிழுப்பு திகதி 21.10.2019 | ஊதா
F 01 10 26 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,011,968/=
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

# மரண அறிவித்தல்கள்

## அமரர் சின்னத்துரை இராசமணி (இராசக்கா)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராசமணி 18.10.2019 வெள்ளிக்கிழமை அமரத்துவமடைந்து விட்டார்.

அன்னார் அமரர் சின்னத்துரையின் அன்பு மனைவியும் அமரர்களான கந்தையா -இரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், அமரர்களான தம்பையா - தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், அமரர் இரவீந்திரன் மற்றும் பத்மாவதி, அமரர் மோகனாம்பிகை மற்றும் இரகுநாதன், வேதவாணி, இரஞ்சினிதேவி, அமரர் ராஜ்குமார் மற்றும் நந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் லலிதாதேவி மற்றும் பாலசுப்பிரமணியம், சுவர்ணராணி, அமரர்களான தங்கராசா, மகாலிங்கம் மற்றும் ரஜித்தா, வக்சலா ஆகியோரின் அன்பு மாமியாரும், கனகம்மா, கனகேஸ்வரி, V.K.சண்முகலிங்கம், இராஜஇராஜேஸ்வரி, சற்குணவதி, V.K.அரசரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அமரர்களான ஆறுமுகம், சுப்பிரமணியம், லலிதா மற்றும் நல்லையா, அமரர் குணரத்தினம் மற்றும் சசிவதனி, அமரர்களான ஏகாம்பரம் - அன்னலட்சுமி, நாகராசா மற்றும் கணேசபிள்ளை, அமரர் சிங்கராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 23.10.2019 புதன்கிழமை காலை 10 மணியளவில் இல.109, திருமகள் வீதி, அரியாலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

109, திருமகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (723)

தகவல்: குடும்பத்தினர்

## க.ம.இராஜேந்திரன் JP

### (ஓய்வு பெற்ற கணக்காளர்)



சங்குவேலி மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட க.ம.இராஜேந்திரன் (JP) (ஓய்வு பெற்ற கணக்காளர்) அவர்கள் 21.10.2019 திங்கட்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும், செல்லையா - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் வசந்தாவின் அன்புக் கணவரும், ஆத்திகன், தர்ஷிகா (பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - நிர்வாகம் வடமாகாணம்), அஜந்தன் ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில். (C-7986)

தகவல்
குடும்பத்தினர்.

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
(C-7539)

காண்டம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.
தொடர்பு : 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)
(731)

100க்கு மேற்பட்டோருக்கு உள்நாட்டு வேலை
50க்கும் மேற்பட்டோருக்கு வெளிநாட்டு வேலை
25க்கும் மேற்பட்டோருக்கு மாணவர் விசா
வழங்கி சாதனை படைத்த SIKARAM ACADEMY
10வது ஆண்டு நிறைவையொட்டி
கொழும்பு முன்னணி நிறுவனங்களுடாக வழங்கும்
Australia, Canada, Switzerland, New Zealand
Student Visa Work Visa – மற்றும் German உல்லாசப் பயணக்கப்பல்
வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடனான
Tourism & Hospitality Management
TVEC & UK Certified
ஹொட்டேல் கற்கைநெறி with
50-100% புலமைப்பரிசில் வாய்ப்புக்கள்
CAMBRIDGE ENGLISH Language Assessment அடிப்படையிலிருந்து IELTS வரையில்
விளக்க கருத்தரங்கும் பதிவுகளும்
ஒக். 30 புதன் 0773616798
No.1 Award Winning Institute of the North
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா றெக்ஸ் - றீன் கேர்ல் அருகே
0212219221
(C-7990)



மருத்துவக் கல்வி கருத்தரங்கு யாழில்...
10 NOVEMBER 2pm to 6pm
@ Jetwing Hotel Jaffna
STUDY IN CHINA
Study with over 100 Sri Lankan Students
Limited seats are available
English Medium MBBS
2020 March intake
Recognized by SLMC
Book your Seats 076 764 6888
www.byfeduk.com
(711)



முதலாவது அணி பயணமானது!
அடுத்த அணியில் 65 பேருக்கு வாய்ப்பு!!
(C-7991)
வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் எமரல்ட் ஐல் ஊடாக...
றோமானியா வேலைவாய்ப்பு
மேசன், கட்டட தச்சுவேலையாள்
மெக்கானிக், களஞ்சியசாலை பணியாளர்
ஓட்டோ எலக்ரீசியன், றைல் ஃபிற்றர், சமையலாளர்
உணவு, தங்குமிடம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள் வழங்கப்படும்
எமரல்ட் ஐல் License No. 2268
077 00 38 215
077 55 46 956
021 221 9 221
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
இஷாரா புடவையகம், The Lovers/Tean Girlsக்கு அருகே)
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk



ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
(696)
021 222 8093
புதிய விலாசம் No.17, Kandy Road, Jaffna.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532

அமெரிக்க அதிஸ்ட விசா- இன்னும் 11 நாட்களே உள்ளது
2021ல் நீங்களும் அமெரிக்காவில்...
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில்வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும்
55000 இலவச விசாக்கள்
0768226241
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்
யாழ்ப்பாணத்தில் இருந்த வேலையற்ற யுவதிகளில் நானும் ஒருத்தி V2TRAVELS இல் பதிந்து விசா கிடைத்ததும் எனக்கு பதிவுத்திருமணம் நடந்து கணவரையும் நிரந்தர விசாவில் அமெரிக்காவிற்கு கூட்டிச்சென்றேன். மிகத்துல்லியமாக வழிநடத்திய V2TRAVELS க்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!
உடனே விரையுங்கள்
திருச்செல்வம்-மரியரோகினி
அமெரிக்கா விசா வெற்றியாளர்
(C-7975)
02-10-2019 தொடக்கம் 05-11-2019 வரை
V2 Travels





| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை | புதுக்குடியிருப்பு |
|---|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 | 0764550673 |
| மானிப்பாய் | சுன்னாகம் | கொடிகாமம் | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை | மருதங்கேணி |
| 0768226238 | 0764550670 | 0764550675 | 0768226230 | 0776697960 | 0764550671 |



இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.